
# இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் சவால்களை முறியடிப்பதில் உலமாக்களின் பங்களிப்பு!

## ஆய்வுக் கட்டுரைகள்



- உலமா காங்கிரஸ் -

# இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் சவால்களை முறியடிப்பதில் உலமாக்களின் பங்களிப்பு!

வெளியீடு :
உலமா காங்கிரஸ்
53, வெக்ஷொல் வீதி,
கொழும்பு - 02.

| | | |
|---|---|---|
| நூல் | - | இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் சவால்களை முறியடிப்பதில் உலமாக்களின் பங்களிப்பு! |
| வெளியீடு | - | உலமா காங்கிரஸ்<br>53, வெக்ஷொல் வீதி,<br>கொழும்பு - 02. |
| அட்டை வடிவமைப்பு | - | எம். பௌஸர் |
| பக்கம் | - | 52 |
| முதற்பதிப்பு | - | 09 ஒக்டோபர் 1999 |
| விலை | - | 60/- |

வெளியீட்டுரை! — (V)

இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியும்
மேலைத்தேய ஆதிக்கமும் — (7)
அஷ்ஷெய்க் ரஷீத் எம் பியாஸ் (நளீமீ) **B.A.**

சமூக, பொருளாதார அரசியல் நெருக்கடிகளும்
உலமாக்களது பங்களிப்பும் ! — (27)
அஷ்ஷெய்க் இனாமுல்லா, (நளீமீ) **B.A.**

யுகத்தின் தேவைகளும்
மத்ரஸா கல்வி முறையும் — (37)
மௌலவி எஸ். எம். எம். நஸீர் (ஜமாலி) **B.Com.**

# வெளியீட்டுரை!

'அல்ஹம்துலில்லாஹ்' முஸ்லிம் சமுகத்தின் உயிர் நாடிகளாக விளங்கும் உலமாக்களின் ஓர் அமைப்பான உலமா காங்கிரஸ். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும் ஜனதிபதி சட்டத்தரணியும் துறைமுகங்கள் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் அவர்களின் ஆலோசனை வழிகாட்டலினதும் அடிப்படையில் 1988ம் ஆண்டும் தோற்றம் பெற்றது.

இன்று முஸ்லிம் சமுகம் சர்வதேச ரீதியிலும் குறிப்பாக இலங்கையிலும் எதிர் நோக்கி வருகின்ற சவால்களுக்கும் முஸ்லிம்களுக்கிடையே அவ்வப்போது ஏற்படுகின்ற பிரச்சினைகள் பிளவுகளுக்கும் தகுந்த முறையில் முகம் கொடுத்து பரிகாரம் காணும் பாரிய பொறுப்பு உலமாக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. அத்துடன் 21ஆம் நூற்றாண்டிலும் உலமாக்களும் முஸ்லிம் சமுகமும் எதிர் கொள்கின்ற சவால்களுக்கு தக்க பதிலடி கொடுத்து சமுகப் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வு வழங்கும் பாரிய பணியை ஒரணியாய் ஒன்று திரண்டு மேற்கொள்வதன் மூலமே இலகுவில் வெற்றி கொள்ள முடியும் என்பதே உலமா காங்கிரசின் நிலைப்பாடாகும்.

எனவே உலமா காங்கிரஸின் நோக்கங்களை மையமாகக் கொண்டு இலங்கையிலுள்ள சகல உலமாக்களையும் ஒன்று திரட்டி தேசிய மட்டத்திலும் பிரதேச மட்டங்களிலும் பல்வேறு செய்திட்டங்கள். செயலமர்வுகள் கருத்தரங்குகள் மூலமாக அவர்களுடன் கலந்துரையாடி கருத்துப் பரிமாறுவதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கையில் இறங்கியுள்ளமை ஓர் முக்கிய அம்சமாகும்.

இதன்படி உலமா காங்கிரஸ் கடந்த காலங்களில் நான்கு உலமாக்கள் மாநாடுகளை நடத்தியுள்ளது.

- ✯ 1989 - கொழும்பு பழைய நகர மண்டபம்
- ✯ 1990 - கண்டி ராஸீக் பரீத் மண்டபம்

★ 1994 - கொழும்பு நாரஹென்பிட்ட
"சாலிகா மண்டபம்"

★ 1996 - கொழும்பு ஸாஹிரா கல்லூரி மண்டபம்

இவ்வமர்வுகளில் கலந்து கொண்ட பிரபல உலமாக்கள் மார்க்க அறிஞர்களினால் இஸ்லாமிய சமூக பொருளாதார கலாச்சார மற்றும் அறிவியல்சார் துறைகளோடு சம்பந்தப்பட்ட பல ஆக்கங்களும், ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றுள் மூன்று ஆய்வுக் கட்டுரைகள் இன்று புத்தக வடிவில் உருவாக்கம் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்தாகும்.

இவ்வாறு புத்தக உருவில் வெளிவந்துள்ள மூன்று ஆய்வுக்கட்டுரைகளையும் சமர்ப்பித்த மௌலவி எஸ். எம். எம். நஸீர் (ஜமாலி) B.Com. அஷ். ஷெய்க், எம். இனாமுல்லாஹ் (நளிமீ) B.A., அஷ். ஷெய்க் ரசீத், எம். பியாஸ் (நளிமீ) B.A., ஆகியோரை உலமா காங்கிரஸ் நன்றியறிதலுடன் நோக்கின்றது. அதே போல் இன்று நடை பெறுகின்ற உலமா காங்கிரசின் இவ் 5ஆவது செயலமர்வில் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளும் இன்ஷா அல்லாஹ் எதிர் காலத்தில் புத்தக வடிவில் வெளிவர ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.

இறுதியாக உலமாக்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ள நபிமார்களின் அனந்தரப் பொறுப்பு எமது ஒற்றுமையின் மூலம் அர்த்த புஷ்டியுள்ளதாக அமைவதற்கும் இஸ்லாமிய புத்தி ஜீவிகள் அணி திரண்டுள்ள இச் செயலமர்வு அதன் உயரிய நோக்கங்களை எய்துவதற்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்வை பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

மௌலவி. எச். எம். எம். இல்லியாஸ்
*பணிப்பாளர்,*
*உலமா காங்கிரஸ்.*

# இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியும் மேலைத்தேய ஆதிக்கமும் !

அஷ்ஷெய்க் ரஷீத் எம். பியாஸ், பி. ஏ.

**இஸ்லாமிய இராச்சியம் என்பதிலிருந்து கருதப்படுவது:-**

இஸ்லாமிய இராச்சியம் என்னும் போது பூமியிலே இஸ்லாத்தின் கொள்கைக்கு ஏற்படுத்திய சத்திய வழிமுறையின் அடிப்படையில் ஆட்சி நிகழும் பகுதிகளை உள்ளடக்கியதாகும். சத்திய வழிமுறை என்னும் போது அல்குர்ஆனும் அண்ணலாரின் வாழ்க்கை முறையும் முதலில் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்களாகும். எனவே இறைசட்டம் நிலைநிறுத்தப்பட்டு அல்லாஹ்வின் ஆட்சி இடம் பெறும் பகுதிகள் அனைத்தையும் இஸ்லாமிய இராஜ்யத்தின் பகுதிகள் எனலாம். இதை இன்னுமொரு வகையில் குறிப்பிடுவதாயின் அரசியல் யாப்புகள் சட்ட திட்டங்கள் சமூக அமைப்புகள் அனைத்தும் குர் ஆன் ஹதீஸ் என்பவற்றின் அடிப்படையாக அமையப் பெற்றிருக்க வேண்டும். இத்தகைய தூய இஸ்லாமிய இராச்சியங்களில் சாந்தி, சமாதானம், அமைதி, அபிவிருத்தி என்பன நிலைத்து நிற்கும். ஆனால் நடைமுறையில் இஸ்லாமிய இராச்சியம் என அழைக்கப்படுவது மேற்குறிப்பிட்ட அம்சங்களில் பெரும்பாலான அம்சங்களை அடக்கப் பெற்று நிகழ்ந்த, அனைத்து ஆட்சிப் பகுதிகளும் அடக்கப் பெறுகின்றது.

ரஸுல்(ஸல்) அவர்களது காலத்திலே இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் அத்திவாரம் தோற்றம் பெற்றது. மதீனாவிலே பெருமானார்(ஸல்) அவர்கள் ஸ்தாபித்த இச்சாம்ராஜ்ய எல்லை நான்கு கலீபாக்களால் வளர்க்கப்பட்டு ஏனைய உமையாக்கள் அப்பாஸியர்கள் போன்றோர்களால் விஸ்தரிக்கப்பட்டது.

நான்கு கலீபாக்களது காலத்திலும் தூய இஸ்லாமிய இராச்சியத்தின் உயரிய பண்புகளை சிறப்புறக் காணக் கூடியதாயிருந்தது. என்றாலும் 4ம் கலீபா அலி (றலி) அவர்களது காலப்பிரிவிலேயே கிலாபத்தில் ஏற்பட்ட பிரச்சினையைத் தொடர்ந்து தூய இஸ்லாமிய இராஜ்யத்தின் தூயவுரு மாசுரத் தொடங்கியது. என்றாலும் இஸ்லாமிய இராஜ்யத்திற்குரிய மிகப்பெரும்பாலான பண்புகள் இக்காலப் பிரிவிலும் காணப்பட்டது என்பது பெரும்பாலான இமாம்களது கூற்றாகும்.(1)

உமையா வம்சத்தினரின் சுமார் ஒரு நூற்றாண்டு கால ஆட்சியின் பின்னால் அப்பாஸிய வம்சத்தினர் ஆட்சிக்கு வந்தனர்.

உமையாக்கால பகுதியிலும் அப்பாஸியர் காலப் பகுதியிலும் ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் சில போது தகுதியற்ற நிலையில் காணப்பட்ட போதும், சில போது தவறான சீரற்ற முறைகளை கையாண்ட போதும், இஸ்லாமிய இராஜ்யத்தில் எவ்வித பாரிய வீழ்ச்சியும் ஏற்படவில்லை. மாறாக விஸ்தரிப்பு நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன.

அப்பாஸியர்களது ஆட்சிக் காலம் சுமார் 5 நூற்றாண்டுகளைக் கொண்டதாகும். இஸ்லாமிய இராஜ்யத்தின் பாரிய விஸ்தரிப்பும், பல்கலைகளின் பாரிய அபிவிருத்தியும் இக்காலப் பிரிவிலே இடம்பெற்றது.

மேற்குலகம் அறிவீனத்தில் மூழ்கி கிறிஸ்தவ பாதிரிமார்களின் இரும்புப் பிடிக்குட்பட்டிருந்த காலப் பகுதியிலே, முஸ்லிம்கள் பல்வேறு துறைகளிலும் பாரிய முன்னேற்றத்தைக் கண்டிருந்தனர். அரசியல், வானவியல், இரசாயனவியல், மருத்துவவியல், உயிரியல் போன்ற பல்வேறு துறைகளிலும் மிக உன்னத முன்னேற்றத்தைக் கண்டிருந்தனர். அதனைத் தான் "மருத்துவத்தின் கதை" என்ற நூலின் ஆசிரியர் விக்டர் ரொபின்சன் "ஐரோப்பா சூரிய அஸ்தமனத்துடன் இருளில் மூழ்கியிருந்த வேளையில், முஸ்லிம் குர்துபாவிலே தெருவிளக்குகள் பிரகாசமாக ஒளிவீசிக் கொண்டிருந்தன. ஐரோப்பா அழுக்கடைந்திருந்த வேளையில் குர்துபாவிலே ஆயிரமாயிரம் குளிப்பறைகள், மாளிகைகள், அரபு கலையம்சங்களால் மிளிர்ந்து கொண்டிருந்தன...."(2) என்று வர்ணிக்கின்றார்.

இந்த வகையில் பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தி கண்ட அப்பாஸியரின் இஸ்லாமிய சாம்ராஜ்யம் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களிலும் பெரும்பாலான பகுதிகளை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. இப்பரந்த இராஜ்யத்தின் ஆட்சியாளரா க அப்பாஸிய கலீபாக்கள், மன்னர்கள் காணப்பட்டனர். உலகிலே இத்தகைய விரிந்த இராஜ்யம் ஒன்று ஒரு தனி ஆட்சியாளரின் கீழ் ஒன்றுபட்ட வரலாற்றை அப்பாஸியர்களது வரலாற்றிலே காணமுடிகின்றது. அப்பாஸியர்களது இராஜ்யமாக இருந்த பரந்து விரிந்த அந்த பகுதி இன்று நூற்றுக்கணக்கான ஆட்சியாளர்களால் ஆட்சி செய்யப்படுகின்றது. அன்று எந்த பரந்து, விரிந்த இஸ்லாமிய இராஜ்யமாக இருந்த போதும், இராஜ்யத்தில் அமைதி நிலவியது. சமாதானம் சுபீட்சம் என்பன காணப்பட்டது. இடையிடையே மாறுகின்ற ஆட்சியாளரின் பலவீனங்களினால் சிற்சில பிரச்சினைகள், குழப்ப நிலைகள், காணப்பட்ட போதும் பொதுவாக அமைதி நிலவியது என்றே கூறவேண்டும்.

இஸ்லாமிய சாம்ராஜ்யம் நிலைத்து நின்ற காலப்பகுதியில், கிழக்கிலும் மேற்கிலும் வாழும் சகல மக்களும், முஸ்லிம் இராஜ்யத்தின் முன்/தலை தாழ்த்தி நின்றனர். ஆட்சியதிகாரம் முஸ்லிம்களின் கரத்தில் இருந்த வேளையில், இஸ்லாத்துக்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள முயன்ற கிறிஸ்தவ, யூத, காபிர்கள் தோல்வி கண்டனர்.

முஸ்லிம்களை இராணுவ ரீதியாக ஒழித்துக் கட்டும் நோக்கில் அப்பாஸியரின் ஐயூப்பிய ஆட்சியாளர்கள் காலத்தில், சிலுவை யுத்தம் ஆரம்பமாகியது. ஜெரூசலத்தை தனது பிரதேசமாக்கும் நோக்கிலும், முஸ்லிம்களை வீழ்ச்சியடையச் செய்யும் நோக்கிலும், முழு ஐரோப்பாவும் இணைந்து இப்போராட்டத்தை நடத்தலாயிற்று. இவ்வேளையில் கூட ஐயூப்பிய ஆட்சியாளரான சுல்தான் சலாகுதீன் அவர்கள் முழு ஐரோப்பியாவின் இராணுவ ரீதியான எதிர்ப்புக்களையும் முறியடித்து, ஜெரூசலத்தைக் காப்பாற்றினார்.

சிலுவையுத்தம் மூலம் மேற்கத்தியர்கள் அரபு நாட்டில் தமது காலடிகளை பதிக்க முற்பட்டனர். இப்பாரிய இராஜ்யத்தை வீழ்ச்சியுறச் செய்யும் நோக்கில் இராணுவ ரீதியில் முன்வைத்த இப்போராட்டம் அல்குர்ஆன் சுன்னா நிழலில் வாழ்ந்து, ஆட்சி செய்த கலிபாக்களால் முறியடிக்கப்பட்டது. சுல்தான் சலாகுதீனினால் மீட்கப்பட்ட அப்புனித நகர் முதலாவது உலக யுத்தம் முடியும் வரை (1918ம்ஆண்டு) முஸ்லிம்களின் ஆதிக்கத்திலே இருந்து வந்தது.(3) இதேவேளை அப்பாஸியரின் ஆட்சிக் காலப்பிரிவில் அறிவியற்துறை மறுமலர்ச்சி கண்டிருந்தது. ஆனால் ஐரோப்பாவோ கல்வித் துறையில் மிகவும் வீழ்ச்சியுற்றிருந்தது. எனவே ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் முஸ்லிம்கள் போல மாறுவேடமணிந்து முஸ்லிம் இராஜ்யத்தில் கல்வி கற்று வரலாயினர். இத்தகையவர்களே பிற்காலத்தில் இஸ்லாமிய இராஜ்யத்தின் வீழ்ச்சிக்காக முற்று முழுதாகப் பாடுபட்டார்கள். உண்மையில் சிலுவைப் போர்களை மதரீதியாக ஆரம்பித்து, இஸ்லாமிய இராஜ்யத்தை வீழ்ச்சியடையச் செய்ய முயற்சித்ததன் முக்கிய நோக்கம், அவர்களது ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதாகும். இப்போர்களில் இராணுவ ரீதியாக தோல்வி கண்ட போது, அரசியல் ரீதியாக இஸ்லாமிய இராஜ்யத்தை எதிர்நோக்கும் நோக்கிலேயே இஸ்லாமிய இராஜ்யத்திலே கல்வி கற்கலாயினர். (4)

இவ்வாறாக இஸ்லாமிய இராஜ்யத்தை வீழ்ச்சியடையச் செய்யும் பாரிய செயலை திட்டமிட்ட அடிப்படையில் செய்ய முற்பட்டவர்கள் மேற்கத்தியவாதிகளேயாவர். அப்பாஸியர் ஆட்சிக் காலப்பகுதியில் வைத்தே அவர்களது நடவடிக்கைகள் மிகவும் மறைவான முறையில் மேற்கொள்ளப்படலாயின. அதன் விபரீத வடிவே இஸ்லாமிய சாம்ராஜ்யம் வீழ்ச்சிக் கம்பத்தை நோக்கலாயிற்று.

அன்று இஸ்லாமிய இராஜ்யத்துக்கு எதிராக மேலைத்தேயவாதிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் வளர்ச்சிப் போக்கையே இன்று பல்வேறு வடிவங்களில் காணக் கூடியதாகவுள்ளது. இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை சிதறடித்த அதேவேளை இன்றுவரை உண்மையான அல்குர்ஆன் சுன்னாவின் நிழலில் இறையாட்சி நிலவும் ஒரு நாடு உருப்பெறுவதை எதிர்த்து வருகின்றனர். தவிர

மறைமுகமான முறையில் இஸ்லாமிய இராஜ்யம் உருப்பெறுவதை தடைசெய்யும் நோக்கத்தில் சுஹூயுனியா, ம.்.சூனிய்யா, பஹாயிய்யா, காதியானிய்யா, றோட்டரி போன்ற இரகசிய இயக்கங்களை அமைத்துச் செயற்படுகின்றனர்.(5)

பொதுவாக இஸ்லாமிய இராஜ்யத்தின் வீழ்ச்சியாக அப்பாஸியர்களது வீழ்ச்சியைப் பெரும்பாலான அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே அப்பாஸியர்களது வீழ்ச்சிக்கான காரணங்களையும் முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கு மேற்கத்தியவாதிகளின் பங்கைப் பற்றியும் இவ்விடம் நோக்குவது பொருத்தமானதாகும்.

உண்மையில் குர்ஆன் நிழலில் அப்பாஸியரின் வீழ்ச்சியை நோக்கின், அப்பாஸியரின் வீழ்ச்சி திடீரென ஏற்பட்டதொன்றல்ல என்பது தெளிவாகும். அப்பாஸியர்களது வீழ்ச்சிக்கு பல்வேறு காரணங்களை பல அறிஞர்களும் கூறியுள்ளனர். அவற்றை உடனடிக் காரணம் மறை முகக் காரணம் எனவும் இரண்டாக வகுத்து நோக்குகின்றனர்.

முஸ்லிம்கள் இஸ்லாத்தில் நிழலில் சம்பூரணமாக வாழ்கின்ற போது இறையுதவி நினையா புறத்திலிருந்து வந்தே தீரும். "நீங்கள் மு.்.மீன்களாக இருந்தால், அஞ்சவோ, சஞ்சலப்படவோ வேண்டாம்" என்று அருள்மறை உரைக்கின்றது. எனவே உண்மை மு.்.மீன்களாக, இஸ்லாத்தில் கட்டளைகளை சம்பூரணமாக ஏற்று நடக்கின்ற போது இறையுதவி நிச்சயம் கிடைக்கும். சஹாபாக்களது காலத்தில் கிடைக்கப் பெற்ற அபரிமிதமான வெற்றிகளை இதற்குச் சான்றாகக் குறிப்பிடலாம். மேலும் இதற்கு இன்று நடக்கின்ற சில சம்பவங்களைக் கூட உதாரணமாகக் கூறலாம். ஆப்கானிஸ்தானிலே தமது தாயகத்தில் இறையாட்சி நிகழ வேண்டும், என்பதற்காகவே உறுதியான உள்ளத்துடன் முஜாஹிதீன்கள் போராடுகின்றனர். அவர்களது வாழ்வும் வாக்கும் இஸ்லாத்தின் நெறியில் அமைந்து காணப்படுகின்றது. இதனால் வல்லரசாகத் திகழும் ரஷ்யாவின் இராணுவத்தையே தலை குனிய வைத்தனர். அது மாத்திரமன்றி அல்லாஹ் அவர்களுக்கு சில அற்புதமான முறைகளில் உதவி செய்திருப்பதை அந்த முஜாஹிதீன்களே உரைத்துள்ளனர்.

ஆனால் அப்பாஸியர் காலத்தின் இறுதிக் காலப்பிரிவில் வாழ்ந்த மக்களின் இறை நம்பிக்கை பலவீனமடையத் தொடங்கியது எனலாம். மன்னரையும் ஆட்சியாளர்களையும் நம்பி வாழும் கூட்டம் அதிகரிக்கத் தொடங்கியது இறைவனிடம் உதவி தேடுவதற்குப் பதிலாக, அரசர்களிடம் உதவி தேடத் தொடங்கினர். மேலும் இஸ்லாமிய இராஜ்யம் விரிவடைந்ததன் காரணமாக பல்வேறு நாடுகளிலிருந்தும் செல்வங்கள் வந்து குவியத் தொடங்கின. செல்வம் வந்து குவிகின்ற அதேவேளை இறை சிந்தனை, இறைவனைப் பற்றிய அச்சம் அருகத் தொடங்கியது. தம்மிடமிருக்கும் செல்வத்தால், தமது ஆட்சியாளர்களால்,

தமது விரிந்த இராஜ்யத்தின் பலத்தால், தமக்கு ஏதும் ஏற்படாது என்ற மனப்பான்மை அன்றைய முஸ்லிம்களிடம் இருந்தது. இதனால் முன்னைய காலங்களைப் போன்று அல்லாஹ்வின் நேரடி உதவி அவர்களை எட்டியது அரிதெனலாம். இமாம் முஹியத்தீன் அப்துல் காதிர் ஜிலானி இந்நிலையைப் பற்றி மிகவும் கவலையுற்றவர்களாக தமது மஜ்லிசுகளில் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் "இதயம் மரணித்து விட்டவர்களே! இறைவனோடு இயற்கைக் காரணிகளை இணை வைப்பவர்களே, தம்முடைய சக்தியையும் ஆற்றலையும், தம்முடைய வாழ்க்கைச் சாதனங்களையும், முதலீடுகளையும் கடவுளெனக் கருதி வழிபடுவர்களே நீங்கள் எல்லாம் அல்லாஹ்வின் அன்பு, மற்றும் தொடர்பை விட்டுத் தடுக்கப்பட்டு வருகின்றீர்களே..."(6) என்று கவலையுடனும், கோபத்துடனும் குறிப்பிட்டதை உதாரணமாகக் கூறலாம். இஸ்லாமிய இராஜ்யத்தின் வீழ்ச்சிக்கு இதுவே முதற் காரணமெனலாம்.

அப்பாஸியர் ஆட்சியாளர்களில் சிலர் ஆட்சிக்குரிய திறமையற்றவர்களாக இருந்தனர். பரந்த ஒரு இராஜ்யத்தின் ஆட்சித் தலைவர், மிகுந்த திறமையும், அனுபவமும் அறிவும் ஆத்மீக பக்தியும், உடையவராகக் காணப்பட வேண்டும். ஆனால், இந்நிலை சில கலீபாக்களிடம் இருக்கவில்லை. அதேவேளை விரிந்த இராஜ்யத்தின் நிருவாகத்தை சீரிய முறையில் செய்யும் திறமையான நிர்வாகிகள் பல சந்தர்ப்பங்களில் அமையவில்லை. இதனால் நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்படுவதுடன் பல அதிகார துஷ்பிரயோகங்களும் இடம் பெற்றன. இத்தகைய ஆட்சியாளர்கள், நிருவாகிகளது காலப்பிரிவை மேற்கத்திய உலகும் இஸ்லாத்தின் எதிரிகளும் சிறந்த முறையில் பயன்படுத்தத் தொடங்கினர். இத்தகைய ஆட்சியின் கொடுமைக்கும் பிரச்சினைக்கும் இலக்காகிய மக்களைக் கொண்டு இஸ்லாமிய இராஜ்யத்தை வீழ்ச்சியுறச் செய்ய வழியமைக்கவும் முற்பட்டனர்.

மற்றும் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட முக்கிய பிரச்சினைகளுக்கு நடவடிக்கைகளை உரிய முறையில் எடுக்கத் தவறினர். உதாரணத்திற்கு இஸ்லாத்தில் முக்கிய இடத்தைப் பெறுவது ஹதீஸாகும். பெருமானார் (ஸல்) அவர்களது கூற்றுக்கள் வாழ்க்கை அம்சங்கள் அனைத்தும் இதிலடங்கும். இதில் எவ்வித இடை செருகலுக்கும் இடமளிக்க முடியாது. ஆனால் கலீபா மஹ்தியின் காலத்திலோ கியாப் இப்னு இப்றா ஹீம் என்பவர் கலீபாவுக்குச் சார்பாக அவரிடத்திலிருந்து சில வெகுமதிகளை எதிர்பார்த்து ரஸூல்(ஸல்) அவர்கள் கூறாத ஒன்றைக் கூறியதாகக் கூறினார். இவரது இப்பொய் ஹதீஸ் இடம் பெறுவதற்கு வெகுமதியை எதிர்பார்த்ததே முக்கிய காரணமாகும். எனவே இதையுணர்ந்த கலீபா கியாஸ்க்கு 10,000 திர்ஹங்களைக் கொடுத்து அனுப்பி விட்டார்.7 மாறாகப் பொய்யாக ஹதிஸ்களை இட்டுக் கட்டியமைக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறி விட்டார். உண்மையில்

இஸ்லாமிய இராஜ்யத்தின் வீழ்ச்சிக்கும் இஸ்லாமிய மூலாதாரங்களில் குறைகளை உண்டு பண்ண வேண்டும் என்ற நோக்கு மேற்கத்தியவாதிகளிடம் இருந்தது. கலீபாவின் இத்தகைய நடவடிக்கையாலே பிற்காலத்தில் இன்னும் அதிகமான புனைந்துறைக்கப்பட்ட ஹதீஸ்கள் தோற்றம் பெறுவதற்குக் காரணமாய் அமைந்து விட்டது.

மேலும் அப்பாஸியரின் வீழ்ச்சிக் காலப் பகுதியில் பல்வேறு கொள்கையை உடையவர்களும் தமது கொள்கையை வலுப்படுத்துவதற்காக பெருமானார்(ஸல்) அவர்கள் கூறியதாக ஹதீஸ்களை இட்டுக் கட்ட அது காலாக அமைந்தது. இவ்வாறாகவே கலீபாக்களின் கீழ் இருந்த பரந்து விரிந்த சாம்ராஜ்யத்தில் சிற்சில சமயங்களில் பிராந்திய ஆட்சியாளர்கள் கலீபாவின் உத்தரவை மீறி பல நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினர். ஏன் சுயாட்சியாகப் பிரகடனப்படுத்தவும் முற்பட்டனர். இவ்வேளையில் "கலீபா" எவ்வித உறுதியான பதில் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இதுவும் வீழ்ச்சிக்கான வழிகளை உண்டு பண்ணியது. இதற்கு உதாரணமாக கலீபா மஃமூனின் அறிஞர்களோடு மெய்யியல் போன்ற துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்ததைக் குறிப்பிடலாம்.

இதேவேளை கலீபாக்களால் நியமனம் செய்யப்பட்ட இராணுவத் தளபதிகள் இஸ்லாம் என்ற உயரிய கொள்கையின் அடியாக பல சந்தர்ப்பங்களில் சிந்திக்கத் தவறி விட்டனர். இதனால் அவர்களது ஜாஹிலியா பண்பாடுகள் தலையோங்க தமது வம்ச உணர்வுகளுக்கு உட்பட்டனர். இதனால் இஸ்லாமிய இராஜ்யத்தின் மகத்துவத்தை மதியாது தமது வம்சத்தினர் ஆட்சியாளராக வேண்டும் என்பதை மிகையாக விரும்பினர். இது இஸ்லாம் விரோதச் சக்திகளுக்கு சார்பாக அமைந்தது. மேலும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் இராஜ்ய விடயங்களில் ஏற்பட்ட சில சிக்கல்களின் காரணமாகவும் இஸ்லாத்தின் எதிரிகளினாலும் சில கொள்கைகள் தோற்றுவிக்கப்பட்டன. இத்தகைய கொள்கை ரீதியாகவும் முஸ்லிம்கள் பிளவு பட்டனர். விசேடமாக இல்முல்கலாம் என்னும் கொள்கையால் பாரிய விபரீத விளைவுகள் ஏற்பட்டதெனலாம். சில கலீபாக்கள் இத்துறைக்கு அதிக ஆர்வம் காட்டியது இதனை மேன்மேலும் மோசமாக்கியது. உதாரணத்திற்காக கலீபா மஃமூன் அவர்களைக் குறிப்பிடலாம். இவர் இல்முல்கலாம் எனும் துறையில் அதிக ஈடுபாடு கொண்டதன் காரணமாக ஆட்சித் துறைகளில் அதிக அக்கறை கூடச் செலுத்தவில்லை. இஸ்லாத்தின் எதிரிகள் இத்தகைய துறைகளை இஸ்லாத்தை எதிர்ப்பதற்கு உரிய ஆயுதமாகப் பயன்படுத்தத் தொடங்கினர். இத்தகைய காரணங்களால் உண்மையான இஸ்லாமிய போதனைகளை போதித்து வந்த பலர் கூட பல்வேறு துன்பங்களுக்கு இலக்காகினர். இமாம் அஹமத் இப்னு ஹம்பல் அவர்களை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இதேவேளை அப்பாஸியர் ஆட்சிக் காலப்பிரிவின் வீழ்ச்சிக் காலப்பகுதியின் சூழ்நிலையை சற்று நோக்கினால் மற்றும் பல அம்சங்களை சிறப்புறக் கண்டு கொள்ள முடியும்.

ஐயூப்பிய ஆட்சியின் முக்கிய ஆட்சியாளராக திகழ்ந்த சுல்தான் ஸலாகுதீன் ஆட்சி செய்து கொண்டிருந்த போது இஸ்லாமிய இராஜ்யத்திற்கு எதிராக மேற்கத்திய உலகத்தினது எதிர்ப்புக்கள் மாத்திரம் இன்றி உள்நாட்டிலும் எதிர்ப்புகள் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்தன. என்றாலும் கூட சுல்தான் ஸலாஹுதீனின் வீரமும் பக்தியும் அத்தகைய அனைத்து எதிர் சக்திகளையும் முறியடிக்கச் செய்தது. சுல்தான் சலாகுதீனின் உள்ளத்தில் இருந்த ஈமானின் பிரகாசமே இதற்கு முக்கிய காரணமெனலாம். சுல்தான் சலாஹுதீன் மரணித்த பின்னர் அவர்களது புதர்வர்களான ஆதில், பாலில் ஆகியோர் ஆட்சிக்கு வந்தனர். இவர்களது காலத்திலே இறைசோதனை இறங்கத் தொடங்கியது. செல்வங்கள் குவிந்து ஆடம்பரமாக வாழ்ந்து வந்த முஸ்லிம்களுக்கு கடும் பஞ்சம் ஏற்படத் தொடங்கியது. செல்வச் செழிப்பில் வாழ்ந்த அவர்களுக்கு, பஞ்சத்தின் கொடுமை பாரதூரமாக புரியத் தொடங்கியது. இப்பஞ்சத்தின் நிலை பற்றி இமாம் இப்னுகதீர் அவர்கள் தமது வரலாற்று நூலிலே விரிவாக வர்ணித்துள்ளார்கள். ஓரிடத்தில் இவ்வாறு வர்ணிக்கின்றார்கள். ”கடும் வரட்சி மிஸ்ர் பூமியை ஆக்கிரமித்து வற்றாத ஜீவநதியாகப் பெருக்கெடுத்தோடிய நைல்நதி பெருக்கெடுக்காமல் விட்டு விட்டது. அரபிய பூமி வரண்டு கரடு முரடாகியது. உண்ணவுணவின்றி உயிரினங்கள் மடிந்தன. மனிதர்கள் பெருவாரியாக மடியத் தொடங்கினர். இலட்சக் கணக்கான மக்கள் மண்ணுலகம் ஏகினர். ஆட்சியாளர் ஆதில் ஒரு மாதமாக தனது சொந்தப் பணத்தின் மூலம் பட்டினியால் மடிந்த முஸ்லிம்களது உடலை அடக்கம் செய்து கொண்டிருந்தார். ஒரு மாதகாலத்தில் இரண்டு லட்சத்து இருபதாயிரம் மைத்துயிர்களை இவ்வாறாக அடக்கம் செய்யப்பட்டது. மாண்ட மக்களது சடலங்கள் அந்த மிஸ்ர் பூமியெங்கும் காணத் தொடங்கியது. மிருகங்கள் கூட அந்த சடலங்களை உண்ட வண்ணமிருந்தன. பசிக் கொடுமை தாங்காமல் பலவீனமான சிறியர்களைப் பிடித்து பெரியவர்கள் உணவாக உண்டனர். இந்நிலையும் மாற பலவீனமான பெரியவர்களை பலமுள்ள மனிதர்கள் உண்டனர். அவ்வளவிற்கு வறுமை வாட்டிக் கொண்டிருந்தது. .....” (8)

ஹிஜ்ரி 597ல் நடந்த இந்த பஞ்சத்தைத் தொடர்ந்து கடும் நோய்கள் பரவத் தொடங்கியது. இதனாலும் இலட்சக்கணக்கான மக்கள் உயிர் துறந்தனர். இஸ்லாமிய சாம்ராஜ்யத்திலே இத்தகைய கடும் பஞ்சமும் துன்பமும் இதற்கு முன்னர் ஏற்பட்டதில்லை. இதனால் இஸ்லாமிய இராஜ்யம் ஓரளவு பலவீனமுற்றது எனலாம்.(9)

இத்தகைய வறுமையும் துன்பமும் இஸ்லாமிய இராஜ்யத்தில் நிலவிய அதேவேளை அப்பாஸிய கலீபாக்கள் பலர் தம் ஆடம்பர வாழ்வில் தொடர்ந்தும் மூழ்கியிருந்தனர். இதற்கு உதாரணமாக அலாவுதீன் திப்றிஸியைக் குறிப்பிடலாம். இவர் தனது ஆண்டு செலவீனமாக ஒரு இலட்சம் தினார்களை செலவிட்டு வந்தார். அவரது மாளிகைக்கு நிகராக பக்தாத் நகரிலே வேறெந்த மாளிகையும் இருக்கவில்லை. அந்தளவுக்கு செல்வச் செழிப்பில் இருந்தனர். இந்நிலையில் ஏழைகள் புறக்கணிக்கப்பட்டனர். ஸகாத்,ஸதகா என்பன ஒழுங்கமைப்பில் தக்வாவின் அடிப்படையில் செலுத்தப்படவில்லை. இதனால் சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகள் இஸ்லாமிய இராஜ்யத்தின் வீழ்ச்சிக்கும் ஒரு காரணமாக அமைந்து விட்டது. ஸகாத்தாலே இஸ்லாமிய சமூக அமைப்பில் எத்தகைய உயரிய நிலை ஏற்படும் என்பதைப் பற்றி கலாநிதி யூசப் கர்லாவி அவர்கள் விரிவான ஓர் ஆராய்ச்சியையே மேற்கொண்டுள்ளார்கள். அதனைப் பார்ப்பதன் மூலம் சிறப்பாகப் புரிந்து கொள்ளலாம். (10)

இத்தகைய காரணங்கள் அப்பாஸியரின் இஸ்லாமிய சாம்ராஜ்யம் வீழ்ச்சியுறுவதற்கு மறைமுகமான காரணங்களாக அமைந்தன. எனவே தான் மௌலானா அபுல் ஹஸன் அலிநத்வி அவர்கள் "அப்பாஸியரின் வீழ்ச்சி திடீரென ஏற்பட்ட ஒருசில காரணங்களின் அடிப்படையாக அமையவில்லை"(11) எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான பொதுக் காரணங்களின் ஊடாக அப்பாஸியரின் வீழ்ச்சிக்கான நேரடிக் காரணம் முஸ்லிம் ஆட்சியாளர் செய்த ஒரு கவனயீனக் குறைவு எனலாம். ஆட்சியாளர்கள் தம்மீதுள்ள பொறுப்புக்களை அசட்டை செய்கிறமைக்கு அப்பாஸியரின் வீழ்ச்சி சிறந்த எடுத்துக் காட்டாகும்.

மங்கோலியர் கோஷ்டியொன்று ஹிஜ்ரி 615ல் வர்த்தக நோக்கில் குவாரிஸ்ம் பிரதேசத்துக்கு வந்தது. இதில் சுமார் நூறு மங்கோல்யர்கள் இருந்தனர். இவர்கள் மன்னர் குவாரிஸ் ஷாவை சந்திப்பதற்கு வந்தனர். ஆனால் உளவாளிகள் எனக் கருதி பிரதேச ஆளுநரின் அனுமதியுடன் காவற்காரர்களால் அவர்கள் கொலை செய்யப்பட்டனர். இச்செய்தி மங்கோலியரின் தலைவர் ஜெங்கிஸ்கானுக்கு எட்டியது. இதற்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி ஆளுநர் முஹம்மத் ஷாவுக்குச் செய்தி அனுப்பினான். ஆனால் ஆளுநர் அதனைப் புறக் கணித்து நடந்தார். ஜங்கிஸ்கானின் செய்தியை எடுத்து வந்த தூதுவாகளையும் கொலை செய்து விட்டனர். இவ்வேளை கோபாவேசம் கொண்ட ஜங்கிஸ்கான் குவாரிஸ்ம் பிரதேசத்துக்கு எதிராகப் படையெடுத்து வரலானான். (12)

சுமார் ஐந்து நூற்றாண்டுகள் இஸ்லாமிய இராஜ்யமாக மிளிர்ந்து கொண்டிருந்த பரந்து விரிந்த பரப்பு மங்கோலியரினால் அழியப் போகின்றது. முழு உலகிலும் முழுப் பலமிக்க கட்சியாக திகழ்ந்த இஸ்லாமிய ஆட்சி, முஸ்லிம்களின் ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்படப் போகின்றது. ஆளுநர் குவாரிஸ் ஷா செய்த தவறு இஸ்லாமிய இராஜ்யத்தின் வீழ்ச்சிக்கு நேரடிக் காரணமாக அமைகின்றது.

புகாரா பிரதேசத்தினூடாக மங்கோலியர் (தாத்தாரியர்) பெரிய படையுடன் குவாரிஸ்ம் பிரதேசத்தை அடைந்தனர். அப்பிரதேசம் முழுவதையும் அப்படியே அழித்தொழித்து விட்டு சமர்கந்து, கஸ்வீ, நைஸாபூரி போன்ற அனைத்துப் பகுதிகளையும் தம் வசம் கொண்டு வரத் தொடங்கினர். காட்டுமிராண்டிகளாக மனித உயிர்களையும் உடமைகளையும் அதிகமாக அழித்தொழித்து வரலானார்கள்.

இவ்வேளை முழு அப்பாஸிய இராஜ்யமும் மங்கோலியர்களுக்கு அஞ்சி நடுநடுங்கிக் கொண்டிருந்தது. இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் தலை நகராகத் திகழ்ந்த பக்தாதும் மங்கோலியரின் அடாவடித்தனத்துக்கு அப்பாற்படவில்லை. கிழக்கில் தொடங்கிய அவர்களது செயல் மத்திய கிழக்கெங்கும் பரவத்தொடங்கியது. இது பற்றி இமாம் இப்னுகதிர் அவர்கள் குறிப்பிடுகின்ற போது "இஸ்லாமிய இராஜ்யத்தின் தலை நகரான பக்தாத் பிரச்சனைகளினது இருப்பிடமாக மாறியது எந்தளவிற்கு எனில் கலீபாக்களின் மரபாக க.்.பாவில் தொங்கும் போர்வையை மாற்றும் பணி நிகழ்ந்தது. இதனை மிகவும் பேணுதலாக தவறாது செய்து வந்தனர். ஆனால் இக்காலப் பகுதியில் சுமார் 21 நாட்கள் க.்.பாவிற்கு எந்த வித போர்வையும் அற்றுக் காணப்பட்டது. அவ்வளவு தூரம் அச்சமும் குழப்ப நிலையும் காணப்பட்டது. "இமாம் இப்னு கதிர் விளக்குகின்றார்".(13)

தாத்தரியர்கள் முஸ்லிம்களை அழித்து வந்த விதம் இஸ்லாமிய இராஜ்யத்தை வீழ்ச்சியுறச் செய்தது மாத்திரம் இன்றி தாத்தரியர்களைப் பற்றிய அச்ச உணர்வையும் முஸ்லிம்களது உள்ளத்தில் இடம் பெறச் செய்து விட்டது. இதற்குப் பல உதாரணங்களை வரலாற்று ஆசிரியர்கள் தமது நூல்களிலே பதிந்துள்ளனர். உதாரணத்திற்கு இமாம் இப்னு அதீர் அவர்களது நூல் தரும் சம்பவத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

"ஒரு முறை தாத்தாரிய பெண் ஆண்வேடம் தரித்து ஒரு முஸ்லிம் வீட்டினுள் நுழைந்தாள். முஸ்லிம்களோ அஞ்சி நடுநடுங்கினர். இவ்வேளை அந்தப் பெண் வீட்டில் உள்ள அனைத்து உறுப்பினர்களையும் கொலை செய்து விட்டார். அச்சந்தர்ப்பத்தில் அவளினால் சிறைபிடிக்கப்பட்ட ஒருவர் இவள் ஒருபெண் என அறிந்ததும் வீறுகொண்டு எழுந்து அவளைக் கொலை செய்து விட்டார்.

சில சந்தர்ப்பங்களில் தாத்தாரியன் ஒருவன் ஒரு முஸ்லீமை அழைத்து "உனது தலையை இந்தக் கல்லின் மீது வைத்துக் கொள் நான் கத்தியுடன் வந்து உன்னைக் கொலை செய்யும் வரையில் அப்படியே இருக்க வேண்டும். என்று பணித்து விடுவான். கொலை செய்ய கத்தியை எடுத்து வரும் வரையில் கல்லிலே தலையை வைத்த வண்ணமிருப்பான்... பின் தாத்தாரியன் கத்தியுடன் வந்து முஸ்லீமை வெட்டிக் கொலை செய்வான்.(14) இவ்வாறாக தாத்தாரியர்கள் முழு முஸ்லீம்களுக்கும் அழிவுகளை ஏற்படுத்தினர். இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் கலைநுட்ப மிகு கட்டிடங்களை எல்லாம் அழித்தனர். அறிவுக் களஞ்சியமான பைத்துல் ஹிக்மாவில் சேகரித்து வைக்கப்பட்ட அறிவுக்கருவூலங்கள் எல்லாவற்றையும் அழித்தனர். தஜ்லா நதியில் அறிவு நூல்கள் அனைத்தும் கொட்டப்பட்டு அதன்மீது நடந்து சென்றதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறாக பல்வேறு துறைகளிலும் தாக்கப்பட்டு வந்த இஸ்லாமிய இராஜ்யம் ஹிஜ்ரி 616ம் ஆண்டு மங்கோலியரின் நேரடித் தாக்குதலால் வீழ்ச்சியடையச் தொடங்கியது. சுமார் 7 நூற்றாண்டுகள் இவ்வுலகிலே பலமிக்க இராஜ்யமாகத் திகழ்ந்த இஸ்லாமிய இராஜ்யம் பலமிலந்து வீழ்ச்சியுறத் தொடங்கியது.

அப்பாஸியர்களின் இந்த வீழ்ச்சி உண்மையில் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியாகவே பெரும்பாலானோர்களால் கருதப்படுகின்றது. அப்பாஸியர்கள் காலத்தில் முஸ்லிம்கள் பெற்றிருந்தது போன்ற ஆட்சியதிகாரம் அதற்கு பின்னர் இதுவரையும் முஸ்லிம்கள் பெறவில்லை. அன்றைய இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியின் தாக்கங்களை இன்று வரை முழு முஸ்லிம் சமூகத்திலும் காணக் கூடியதாயிருக்கின்றது. அன்று அப்பாஸியர் வீழ்ச்சிக்கு மறைமுகமாகப் பாடுபட்டு வந்த இஸ்லாம் விரோதக் கொள்கைகளை, அச்சக்திகள் தொடர்ந்து மேற்கொண்டே வருகின்றன.

இத்தகையவர்களது இஸ்லாம் விரோதச் செயல்கள் பல்வேறு வடிவங்களில் பல்துறைகளிலும் இழந்து விட்ட இஸ்லாமிய இராஜ்யத்தின் மூலை முடுக்குகள் நோக்கிச் செல்லலாயிற்று. கிழக்கிலே தாத்தாரியர்கள் செல்வாக்குப் பெற்று இஸ்லாமிய இராஜ்யத்தை வீழ்ச்சியுறச் செய்வதற்கு மேற்கத்தைய உலகின் திட்டமிட்ட விரோதச் செயற்பாடுகளே காரணமெனலாம்.

இனி இஸ்லாத்திற்கும் இஸ்லாமியர்களுக்கும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்துக்கும் எதிராகப் பாடுபடுகின்ற மேலைத்தேயவாதிகளின் ஆதிக்கத்தின்பால் எமது கவனத்தைச் சற்றுத் திருப்புவது பொருத்தமானதாகும்.

உமையாக்களது ஆட்சியின் போது இஸ்லாமிய இராஜ்யம் ஐரோப்பா வரை விரிவடைந்தது. ஐரோப்பாவில் கிறிஸ்தவ யூதர்களின் ஆதிக்கம் பரவலாகக் காணப்பட்டது. பெருமானார் (ஸல்) இஸ்லாத்தைப் போதிக்கின்ற போது மக்கா மதீனாவிலும் யூத கிறிஸ்தவர்கள் பலமான எதிர்ப்புக்களைத் தெரிவித்தனர்.

குறைஷிகாபிர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு தூண்டுகோலாக இருந்தவர்கள் இவர்களேயாவார். மதினாவிற்கு ரஸலுல்லாஹ் (ஸல்) ஹிஜ்ரத் மேற்கொள்வதற்கு முற்பட்ட காலப்பகுதியில் மதீனா வாழ் மக்களை கோத்திர ரீதியாகப் பிளவுபடச் செய்து தாம் சிறப்பாக வாழ்ந்து வந்தனர். அவ்ஸ்-கஜ்ரஜ் என்ற இரு கோத்திரங்களுக்கிடையில் பல்லாண்டுகளாக போர் மூழ்வதற்கும் இந்த யூதர்களே காரணமாகும். இத்தகைய யூத கிறிஸ்தவர்கள் பெருமானாரின் போதனைகளால் தலைகுனிய வேண்டிய நிலைக்குட்பட்டனர். என்றாலும் அவர்களது இரத்தத்திலே ஊறிக்கிடந்த விரோதச் செயல் சற்றும் தணியவில்லை. எனவே தான் பெருமானார் வபாத்தான பின்னர் தமது கொடுங்கரங்களை பதிக்கத் தொடங்கினர். ஆனாலும் அதிலும் உயர் கலீபாக்கள் உறுதியாக இருந்ததால் தோல்வி கண்டனர். பின் மேற்குலகுடன் இணைந்து தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளலாயினர்.

உமையாக்கள் அப்பாஸியர் காலத்திலே ஐரோப்பாவின் முக்கியமான பல பகுதிகள் முஸ்லிம்களது தரத்துக்கு வந்தன. இந்த வேளையில் முஸ்லிம்கள் முழு உலகிலும் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் கண்டிருந்தனர். இதனால் மனக்கிலேசம் கொண்ட மேலைத்தேயவாதிகள் தமது ஆதிக்கத்தை இஸ்லாமிய இராஜ்யத்தில் புகுத்தி விடுவதற்காக பல்வேறு சதிகளைச் செய்தனர். அவற்றில் ஒன்று தான் ஏற்கனவே குறிப்பிட்ட அப்பாஸியரின் வீழ்ச்சியாகும்.

அப்பாஸியரின் வீழ்ச்சிக்குப் பின்னர் மீண்டும் இந்த உலகில் முஸ்லிம்களது கரம் உயரக் கூடாது என்ற நோக்கில் மேலைத்தேயவாதிகள் மும்முரமாக செயற்படத் தொடங்கினர். இதற்கு முஸ்லிம்களை கொள்கை ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் பலமிலக்கச் செய்வது தான் பொருத்தமான வழி என்பதை சிலுவைப் போர்கள் மூலம் கண்டு கொண்டனர். எனவே அன்று தொடக்கம் இன்றுவரை இத்தகைய துறையூடாக முஸ்லிம்களை எதிர்த்து வருகின்றனர்.

மேற்கத்தையவாதிகள் முஸ்லிம்களிடம் இருக்கும் அல்குர்ஆன் அண்ணல் நபியின் வழிமுறை இவையிரண்டுக்கும் கடுமையாக அஞ்சினர். உலகத்தின் பெரும்பகுதியை தமதுகரங்களின் கீழ் வைத்துக்கொள்வதற்கு வலுவை வழங்கியது இவ்விரு மூலாதாரங்களுமேயாகும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். எனவே இவற்றின் மீது முஸ்லிம்களுக்கு இருக்கும் பற்றை இல்லாமலாக்குவதாலேயே முஸ்லிம்களை பலமிழக்கச் செய்யமுடியும் என அறிந்திருந்தனர். எனவேதான் விக்டோரியா கால பிரிட்டிஸ் பிரதமர் திரு.கிளாஸ்டன் பிரித்தானிய மக்கள் சபையில் எழுந்து தனது கரத்தில் குர்ஆனை ஏந்திய வண்ணம் இந்தப் புத்தகம் எகிப்தியரிடம் இருக்கும் வரை அந்நாட்டில் நாம் சமாதானத்தையோ அமைதியையோ அனுபவிக்கமுடியாது...(15) என்று கூறினார்.

மேலும் பல மேலைத்தேய அறிஞர்கள் முஸ்லிம்கள் குர்ஆன் சுன்னாவின் அடிப்படையில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்ற போது அவர்களது ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பவற்றை ஒருபோதும் குலைத்து விட முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

எனவே முஸ்லிம்களை குர்ஆன் சுன்னாவை விட்டு தூரமாக்கும் பணியிலே அவர்கள் முக்கியமாக ஈடுபட்டனர். இதற்கு மற்றுமொரு உதாரணத்தைக் குறிப்பிடலாம். ஐக்கிய இராஜ்யம் (பிரித்தானியா) இந்தியாவை தமது காலனித்துவ நாடாக ஆக்கிக் கொள்வதற்கு பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொள்ளலாயிற்று. இவ்வேளையிலெல்லாம் கடுமையான எதிர்ப்பு முஸ்லீம்களாலேயே எழுந்தது. எனவே தான் இந்தியாவை சம்பூரணமாக தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து எவ்வித எதிர்ப்பும் இன்றி ஆட்சி செலுத்துவதற்கு முஸ்லிம்களின் குர்ஆன் சுன்னாவின் அடிப்படையிலான ஐக்கிய சமூகத்தை சீர்குலைப்பதே ஒரே வழி எனப் பிரித்தானியாவில் இருந்து வந்து இது சம்பந்தமாக ஆராய்ந்த குழு அறிக்கை சமர்ப்பித்தது. எனவே தான் திட்டமிட்ட அடிப்படையில் முஸ்லிம்களைக் கொண்டே முஸ்லிம்களை அழிக்கும் நோக்கில் தீர ஆராய்ந்து ஒரு வழியை உண்டு பண்ணினர். இதுவே "காதியானியா" என்ற பெயரில் உருவாகி முஸ்லிம்களின் ஐக்கியத்தைச் சீர்குலைத்தது.

பிரித்தானிய ஆட்சிக்குட்பட்டிருந்த இந்திய நீதிமன்றமொன்றில் சாதாரண எழுதுவினைஞராகப் பணி புரிந்து வந்த மிர்சாகுலம் காதியானி என்ற முஸ்லிமை விலைக்கு வாங்கி அவனைக் கொண்டு முஸ்லிம்களைச் சீர்குலைக்க முற்பட்டனர். மிர்ஸாகுலம் தான் ஒரு நபி என்றும், பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பின்னரும் நபிமார்கள் வருவார்கள், இறுதி நாள் வரை நபிமார்களின் வருகை இடம் பெறும் என்ற கருத்தை முன் வைத்தான். இதனால் முஸ்லிம்கள் மத்தியில் பிளவு ஏற்பட்டது. முஸ்லிம்களின் ஐக்கியம் சீர்குலைந்தது. இதனால் பிரித்தானியர்களுக்கு எதிராக காலனித்துவத்திற்கு எதிராக இந்திய பூமியில் எழுந்த குரல்கள் பலமிழக்கலாயிற்று. இது இந்த நூற்றாண்டில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒரு மாபெரும் சதியாகும்.

இதற்கு முன்னர் பாரதப் பூமியிலே சுமார் 6 நூற்றாண்டுகள் இஸ்லாமியரின் ஆட்சி நிலவியது. முகலாய ஆட்சியாளர்களுள் பெரும்பாலானவர்கள் இஸ்லாத்தின் நிழலில் ஆட்சி செலுத்தினர். இம்முகலாய சாம்ராஜ்யத்தை முறியடிப்பதற்காக பல்வேறு சக்திகள் பல்வேறு வகையில் செயற்படலாயின. அதன் ஒரு வடிவமே இஸ்லாமிய கொள்கையில் மாற்றங்களைக் கொண்டு வர எத்தனித்ததாகும். அதன் வெற்றி நிலையே அக்பர் பாதுஸா எம்மதமும் சம்மதம் என்ற அடிப்படையில் அனைத்து மதக்கருத்துக்களையும் ஒன்றாகச் சேர்த்து தனிமதமொன்றை உருவாக்கினார்.

இதனால் முஸ்லிம்கள் பிளவுபட்டதுடன் முகலாய சாம்ராஜ்யமும் முடிவுக்குச் செல்லக் காலாக அமைந்து விட்டது. சுமார் 6 நூற்றாண்டுகளாக முஸ்லிம்களது கரத்திலே இருந்த ஆட்சி திட்டமிட்ட இந்த மேற்கத்தைய சதியால் வீழ்ச்சியடையலாயிற்று.

இவ்வாறாக இஸ்லாமிய இராஜ்யத்தின் வீழ்ச்சிக்கும் முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கும் மேற்குலகம் பல்வேறு வகையில் தனது பூரண எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட விதத்தை வரலாறு எங்கும் காண முடிகின்றது. இதிலிருந்து முஸ்லிம்களது வீழ்ச்சியின் பின்னணியில் மேற்குலக ஆதிக்கம் மேலிட்டு காண்பதை அவதானிக்க முடியும்.

இனி மேற்குலகச் சக்திகள் எத்தகைய முறையில் எந்தெந்த வழிவகையில் தமது முஸ்லிம்களுக்கு எதிரான ஆதிக்கத்தை நிலைநிறுத்தியுள்ளன எனச் சுருக்கமாக நோக்குவது சிறந்ததாகும்.

**இஸ்லாமிய மூலாதாரங்களில் சந்தேகங்களை உண்டு பண்ணி அவற்றை விட்டு முஸ்லிம்களை தூரமாக்கல்: –**

மேற்கத்தையசக்திகள்உட்படஇஸ்லாத்தின்எதிரிகளும்இத்துறையில் அதிக கரிசனை காட்டினர். இஸ்லாத்தின் மூலாதாரங்களுள் முக்கிய இடம் வகிக்கும்குர்ஆன்சுன்னாஎன்பவற்றிலேஅதிககவனம்செலுத்தினர்.அப்பாஸியர் காலப்பகுதியில்குர்ஆன்படைக்கப்பட்டதுபோன்றகருத்துக்கள்"இல்முல்கலாம்" என்ற பெயரில் தோற்றம் பெறலாயிற்று. இது அக்காலப் பிரிவில் குர்ஆன் மூலத்தினைக் கொண்டு பிளவுரச் செய்த சதியாகும். அவ்வாறே இக்காலப்பிரிவிலும்குர்ஆனைக்கொண்டுமுஸ்லிம்களைபிளவுபடுத்துவதற்காக "குர்ஆனை" மாத்திரமே ஏற்றுக் கொள்ள வேண்டும். குர்ஆன் தத்தம் தாய் மொழிகள் மூலமே ஓதப் பெற வேண்டும். குர்ஆனின் சில பகுதிகள் மாற்றப்பட வேண்டும். குர்ஆனின் "குல்" (நபியே) நீர் கூறுவீராக" என்று வரும் பகுதிகள் அகற்றப்படவேண்டும்போன்றகருத்துக்கள்இங்குபரப்பப்பட்டுவருகின்றன.

**மேற்கத்தைய கீழைத்தேயவாதிகள்: –**

குர்ஆனைக் கொண்டு பிளவுகளை உண்டு பண்ணுவதில் மேற்கத்தைய, கீழைத்தேயவாதிகள் முக்கியவிடத்தை வகிக்கின்றனர். அவ்வாறே ஹதீஸ்களிலும் ஐயங்களை உண்டு பண்ணி முஸ்லிம்களை இஸ்லாத்தை விட்டு தூரமாக்குவதற்கான நடவடிக்கைகளில் மும்மரமாக ஈடுபட்டனர்.

குர்ஆனில்ஐய்ப்பாடுகளைஉண்டுபண்ணிமுஸ்லிம்களைஇஸ்லாத்தை விட்டும்தூரமாக்குவதற்குமேற்கொண்டநடவடிக்கைகள்அவ்வளவுதூரம்வெற்றி பெறவில்லை. எனவே ஹதீஸ் துறைகளில் அதிக கவனம் செலுத்தினர். இதற்காக ஹதீஸ்துறையில்ஆழமான அறிவை பெற முயற்சித்தனர்.எத்தகைய முறைகளில் ஹதீஸ்களில் ஐயப்பாடுகளை உண்டு பண்ண முடியும். எத்தகைய முறையில் ஹதீஸ்களில்குறைகளைஉண்டுபண்ணமுடியும்எனஆய்வதேஇவர்கள்கற்பதன் முக்கிய நோக்கமாக இருந்தது. மாறாக இஸ்லாத்தை சிறந்த முறையில் கற்க வேண்டும்:இஸ்லாத்தைவிளங்கவேண்டும்சிறந்தபட்டங்களைப்பெறவேண்டும் என்பன போன்ற நோக்கங்கள் இருக்கவில்லை. இத்தகைய துறையில் தம்மை அர்ப்பணித்தவர்களாக திரு. தோல்ட்ஸியர், பிலிப்,ஹிட்டி, ஆர்ஏ.நிக்கல்ஸன், டீ.எஸ். மாகோலித், டபிள்யூ.மூர் போன்றவைகளை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம்.(16)

ஹதீஸ் துறையில் அதிக ஈடுபாடு கொண்டு ஹதீஸ்களையும் அதன் அறிவிப்பாளர்களையும் நுணுக்கமாக ஆய்ந்து சந்தேகங்களை உண்டு பண்ணியதில் கோல்ட்ஸியர் முக்கிய இடத்தை வகிக்கின்றார். இவர் ஹதீஸ்களை அதிகமாக அறிவித்த சஹாபாக்களான அபூ ஹுரைரா (ரழி), ஆயிஷா (ரழி) போன்றவர்களைப் பற்றியும் ஏனைய ஹதிஸ் அறிவிப்பாளர் பற்றியும் தப்பபிப்பிராயங்களை உண்டு பண்ணியுள்ளார். இதன் மூலம் அதிகமான ஹதீஸ்களை நிராகரிக்கச் செய்து முஸ்லிம்களை சிக்கலுக்கு இலக்காக்க முடியும் என எதிர்பார்த்தார். இத்தகையவர்களின் செயற்பாடுகளாலேயே ஹதிஸ்கள் ஏற்றுக் கொள்ளமுடியாதவை. ஹதீஸ்கள் போலியானவை. சில ஹதீஸ்களை மாத்திரமே ஏற்க வேண்டும். சில சஹாபாக்களது அறிவிப்புக்களே ஏற்றுக் கொள்ளத் தக்கவை போன்ற கருத்துக்கள் பரவத் தொடங்கியது. மேலும் சஹாபாக்கள் மோசமான முறையில்நடந்தார்கள் என்றும் பல்வேறுவகையில் போலிகளைக் கொண்டு வந்து குவிக்கத் தொடங்கினர். இத்தகைய முறைகளில் குர்ஆன், சுன்னா என்பவற்றைவிட்டும் முஸ்லிம்களைத்தூரமாக்கவழிகளை உண்டு பண்ண முயற்சித்தனர். என்றாலும் காலாகாலம் இஸ்லாமிய உலகில் தோன்றிய உத்தமர்கள் தம்மால் இயன்ற அளவு இவற்றுக்குப் பதிலடிகளை வழங்கியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அஷ்ஷெய்கு முஸ்தபா ஹிபாஷி அவர்களை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.(17)

**இஸ்லாமிய வரலாற்றை இருட்டடித்தல்:-**

இஸ்லாத்தின் மூலதாரங்களுடன் இஸ்லாத்தின் தூய வரலாறும் அதன் எழுச்சிக்கு உயரிய தூண்டுதல்களை வழங்கிக் கொண்டிருக்கின்றது. தூய இஸ்லாமிய வரலாறும் மேற்கத்தைய உலகத்திற்கு ஒரு சவாலாகவே இருந்தது. இதனால் மேற்கத்தைய கீழத்தைய வாதிகள் உட்பட இஸ்லாத்தின்

எதிரிகள் அனைவரும் இஸ்லாமிய வரலாற்று உண்மைகளை இருட்டடிப்பு செய்யத்தொடங்கினர். மிகவும்சிறிய அம்சங்களைக்கூட அவர்கள் திட்டமிட்ட அடிப்படையில் தமக்கிருக்கும் சர்வதேச ஜனரஞ்சகத்தைப் பயன்படுத்தி பரப்பத் தொடங்கினர் இதற்கு பிலிப் ஹிட்டியின் ஒரு கருத்தைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். இவர் அமெரிக்க கலைக்களஞ்சியத்தில் "அரபு இலக்கியம்" என்றதலைப்பில் எழுதுகையில் "உயிரோட்டமுள்ள இலக்கியப் படைப்புக்கள் 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் லெபனானிய கிறிஸ்தவர்களாலேயே உருப்பெற்றன...(18) என்ற கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் சர்வதேச ரீதியில் மெச்சப்படுகின்ற அரபு இலக்கியங்கள் உயிரோட்டமற்ற இலக்கிய உருவங்களாக உலகத்துக்குக் காட்டப்படுகின்றன.

அவ்வாறே இஸ்லாமிய வரலாறு வெறும் அதிகாரப்போராட்டங்களும் யுத்தங்களும் மூண்ட ஒரு வரலாறாகப் பரப்பப்படுகின்றது. இதன் மூலம் இஸ்லாமிய வரலாற்றின் உன்னதமான செயற்பாடுகள் எவற்றையும் சாதாரண மக்களது பார்வைக்கு எட்டாமல் செய்து விட்டுள்ளனர். உதாரணத்திற்கு உமையா, அப்பாஸிய வரலாற்றைக் குறிப்பிடலாம். இவ்விரு வரலாற்றை ஆய்வதற்குரிய ஆய்வு நூல்களை எடுத்து நோக்கின் ஆட்சியதிகாரம் அதில் ஏற்பட்ட சிக்கல்கள், போராட்டங்கள் போன்றன பற்றியே அதிகமாகக் காணலாம். மாறாக சீர்திருத்த செம்மல்களின் சீரிய பணிகளைப் பற்றியோ அத்தகைய ஆட்சிகளின் உயரிய விளைவுகளைப் பற்றியோ அதிகமாகக் காண முடியாது. இதற்குத் திட்டமிட்ட இருட்டடிப்பே காரணமெனலாம்.

அவ்வாறே இஸ்லாமிய வரலாற்றை மோசமானதாக, குறைகள் நிரம்பியதாக காட்டி அதனை இருட்டடிப்பு செய்வதற்கு சில முஸ்லிம்களைக்கூட ஆயுதங்களாக பயன்படுத்தத் தொடங்கினர். மேற்கத்தைய வாதிகளிடம் கல்வி பயின்று அவர்களது நச்சுக் கருத்துகளுக்குப் பலியாகியதே இதற்குக் காரணமாகும். இத்தகையவர்களும் இஸ்லாமிய வரலாற்றையும் இஸ்லாத்தையும் மாசுபடுத்தும் விதத்தில் நூல்களை எழுதியுள்ளனர். இதற்கு உதாரணமாக எகிப்தைச் சேர்ந்த அஹமத் அமீன் தாஹா ஹுஸைன் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

### 3. உதவிகள் என்ற பெயரில் உபத்திரத்தை உண்டு பண்ணுதல்:-

இஸ்லாமிய இராஜ்யத்திற்கு எதிரான நவீன மேற்கத்தைய சக்திகள் இந்த வழிமுறையையே கையாளுகின்றன. பொதுநல சேவை, சமூக சேவை இயக்கம், மனிதாபிமான உதவி போன்ற பெயர்களில் தமது பாதகச்

செயல்களை புரியத் தொடங்கினர். இதன் மூலம் இவர்கள் எதிர்பார்ப்பது முஸ்லிம்களதுவீழ்ச்சியேயாகும்.இன்றுவறுமையால்வாடுகின்றஏரிடெரியா போன்ற பகுதிகளுக்கு மனிதாபிமான உதவி என்ற பெயரில் உதவிகளைச் செய்துபல்வேறுசதிகளைச்செய்துவருகின்றனர்.

**4. கல்விக் கொள்கைகளில் தமது ஆதிக்கத்தைச் செலுத்தி அடிமட்டத்திலிருந்தே எழுச்சியை ஏற்படுத்தல்.**

எதிர்கால சமூகம் இஸ்லாத்தின் நிழலில் வாழ்வதற்காக துணை புரியும் அனைத்து எழுச்சியையும் தடை செய்தல் மேற்கத்தவையவர்களின் நோக்கமாகும்.இந்தவகையில்முஸ்லிம்களின்கல்விக்கொள்கைகளில்தமது ஆதிக்கத்தைச்செலுத்ததம்மால்ஆனமுயற்சிகளைச்செய்துவருகின்றனர். இதற்குஇஸ்லாத்தைச்சரியானமுறையில்புரியாததமதுகல்வித்திட்டத்தில் வளர்ந்தமுஸ்லிம்களைஆயுதங்களாகபயன்படுத்தத்தவறவில்லைஎனலாம். இதற்கு உதாரணமாக முன்னர் ஒருபோது எகிப்தில் கல்வி அமைச்சராக நியமனம் பெற்ற தாஹா ஹுஸைனைக் குறிப்பிடலாம். இஸ்லாத்துக்கு மாற்றமானபல்வேறு அம்சங்களை எகிப்திய கல்விக் கொள்கையில் புகுத்தி இன்றுவரைஅவைஇடம்பெறுவதற்குஇதுவழிவகுத்ததுஎனலாம்.

கல்விக் கொள்கையில் இஸ்லாத்துக்கு மாற்றமான கருத்துக்கள் புகுத்தப்பட்டு விட்டதால் இது பிற்காலத்தில் பேருறுப் பெற்று இஸ்லாத்தை வீழ்ச்சியுறச் செய்வதற்கு வழிவகுக்கும் என்பதை உணர்ந்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அண்மையில் கூட உலகிலே அதிக எண்ணிக்கையான முஸ்லிம்களைக் கொண்ட இந்தோனேசியா நாட்டில் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது அறியக் கிடைத்துள்ளது. அங்கு கல்வி அமைச்சராக ஒரு கிறிஸ்தவர் இருப்பது இதற்குச் சிறந்த பயனளித்து வருவதாகக் கூறப்படுகிறது. உண்மையில் எதிர்கால சமூகத்தை தமக்கியைந்த, தமது கருத்துக்கேற்ற சமூகமாக மாற்ற வேண்டுமாயின் அந்தச் சமூகத்தின் கல்விக் கொள்கைகள், திட்டங்கள் என்பனவற்றிலே மாற்றம் செய்யப்பட வேண்டும்.

**5. சஞ்சிகை, நூல்கள் போன்ற வெளியிடல்:-**

இஸ்லாத்தின் வீழ்ச்சிக்கான விசக் கருத்துக்களை சர்வதேச ரீதியில் விதைப்பதற்கு இத்தகைய தொடர்பு சாதனங்களே முக்கியம் பெறுகின்றன. இவற்றை சம்பூரணமாகப் பயன்படுத்தி தம்மால் இயன்ற அளவு கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள் அனைத்தும் அவர்களது கரங்களில் இருப்பது இதற்குப் பெருத்த பலமாக உள்ளது. இதேவேளை இஸ்லாத்திற்கு எதிரான நூல்கள், சஞ்சிகைகள்,

படங்கள், துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றுக்கு அதிக விளம்பரங்கள் கொடுத்து சர்வதேச மயப்படுத்தி இஸ்லாத்துக்கு எதிரான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. இதற்கு உதாரணமாக சல்மான் ருஷ்தியின் "சாத்தானிய வசனங்கள்" என்ற நாவலை குறிப்பிடலாம்.

### 6. இஸ்லாமிய ஷரிஅத் சட்டங்களை குறைப்படுத்திக் காட்டல்:-

இஸ்லாத்தை ஒரு குறைவுற்ற மார்க்கமாகவும் அதன் சட்டதிட்டங்கள் எக்காலத்துக்கும் ஏற்றவை அல்ல என்றும் கருத்துக்களைப் பரப்பி இஸ்லாத்தை மோசமாகவே சித்திரித்துக் காட்டி வருகின்றனர். இதனாலே இஸ்லாம் வாளால் பரப்பப்பட்ட மார்க்கம், இஸ்லாமிய சரிஅத்சட்டம் மனிதாபிமானமற்ற காட்டு மிராண்டிச் சட்டம் போன்ற கருத்துக்கள் தோற்றம் பெற்றன. இஸ்லாத்தின் எதிரிகளின் இச்செயற்பாடுகளாலேயே இஸ்லாத்தை குறை கூறும் மக்கள் தோற்றம் பெறலாயினர். எமது நாட்டிலும் "முஸ்லிம்களின் ஷரிஅத் சட்டங்கள் மாற்றப்பட வேண்டும், அவை குறைகள் நிறைந்தவை" எனக் கூறுவதற்கும் இதுவே காரணமாகும். இத்தகைய சட்ட திட்டங்கள் இவ்வாறு காட்டப்படுகின்ற போது இத்தகைய சட்ட திட்டங்கள் அமுல் படுத்தப்படும் ஆட்சி முறை உருப் பெறக் கூடாது என்ற நிலை தோன்றும். இதனால் இஸ்லாமிய இராஜ்யமொன்று தோற்றம் பெற முடியாது.

### 7. இஸ்லாத்தின் எதிர்சக்திகளுக்கு ஆதரவு அளித்தல்.

சர்வதேச ரீதியில் இஸ்லாத்துக்கு எதிராக உருவாகும் கொள்கைகள், இயக்கங்கள் போன்ற அனைத்துக்கும் மேற்கத்தைய சக்திகள் ஆதரவு அளிக்கின்றன. காதியானிகள் பஹாயீக்கள் போன்றவர்கள் சர்வதேச ரீதியில் பிரபல்யம் அடைய மேற்கத்தைய வாதிகளே காரணகர்த்தாக்கள் ஆவர். அவ்வாறே அத்தகைய சக்திகள் வெற்றி பெறுவதற்கு பொருளாதார உதவிகள் கூட வழங்கப்படுகின்றன.

இவ்வாறாக மேற்கத்தைய சக்திகளும் இஸ்லாம் விரோதச் சக்திகளும் பல்வேறு திட்டமிட்ட நுணுக்கமான வழிமுறைகளால் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிர்த்து வருகின்றனர். எந்தெந்த வழிமுறைகளினால் இஸ்லாத்தை விட்டு முஸ்லிம்களை தூரமாக்க முடியுமோ அந்தந்த வழிமுறைகளை எல்லாம் கையாண்டு வருகின்றனர். இதனால் தான் முஸ்லிம் நாடுகளிலும் முஸ்லிம்களது வாழ்விலும் மேற்கத்தைய ஆதிக்கம் பல்வேறு விதத்தில் புகுந்து இருப்பதைக் காண முடிகின்றது.

இத்தகைய மேற்கத்தையவாதிகளது அடிப்படை நோக்கங்களில் ஒன்று உலகெங்கும் வாழும் முஸ்லிம்கள் ஒன்றிணைந்து மீண்டும் ஓர் இஸ்லாமிய இராஜ்யத்தை உருவாக்கி விடக் கூடாது என்பதாகும். எனவே தான் சர்வதேச ரீதியில் முஸ்லிம்கள் ஐக்கியப்படுவதை தமது சக்தி மிக்க உளவாளிகளால் சீர்குலைத்து வருகிறது மேற்கத்தைய சக்திகள்.

மேலும் முழு உலகிலும் குர்ஆன் ஹதீஸ் அடிப்படையில் ஒரு நாடு உருவாகுவதை இட்டு மேற்குலகம் கடுமையாக அச்சம் கொள்கின்றது. இதனால் தான் இஸ்லாத்தின் எழுச்சிக்காக உருப்பெறுகின்ற அமைப்புக்கள் இயக்கங்கள் என்பவற்றை முளையிலே கிள்ளி எறிவதற்கு முனைகின்றன. ஆட்சியாளர்கள் மூலம் இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இதற்கு உதாரணமாக எகிப்து நாட்டின் இஸ்லாமிய எழுச்சிக்காகப் பாடுபட்டு வரும் இக்காலத்திலும் முஸ்லிமின் இயக்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் அக்கிரமங்களைக் குறிப்பிடலாம். அந்நாட்டு அரசாங்கமே இதனை முன்னின்று செய்கிறது. எனவே தான் இக்வானுல் முஸ்லிமீன் இயக்கம் எகிப்தில் தடை செய்யப்பட்டுள்ளதுடன் அதன் ஸ்தாபக உறுப்பினர்களான அஷ்ஷெய்கு ஹஸனுல் பன்னா ஷகீத் ஸெய்யித் குதுப் போன்றோர்படுகொலைசெய்யப்பட்டனர்.

இவ்வாறே தமது நாட்டில் இஸ்லாத்தின் ஜோதி சுடர் விட வேண்டும்: இஸ்லாமியநாடாகதமதுநாடுமாறவேண்டும்என்றதூயநோக்கில்ஆப்கானிஸ்தான் முஜாகிதீன்கள்ரஷ்யவல்லரசுக்கெதிராகப்போராடிவருகின்றனர்.இவர்களதுஇந்தப் போராட்டசக்தியைப்போக்கி,இவர்களிடமிருக்கும்ஐக்கியத்தைசீர்குலைப்பதற்காக மேற்கத்தையசக்திகள்கைகோர்த்துஉதவிசெய்துவருகின்றன.அவ்வாறேஈரானிய இஸ்லாமியப்புரட்சிகிழக்கினதும்,மேற்கினதும்சக்திகளுக்குமத்தியில்வெற்றிவாகை சூடியபோதுமேலைத்தேயசக்திகள்கடுமையானதன்எதிர்ப்புக்களைமுன்வைக்கத் தொடங்கின.

இவ்வாறாகநோக்குகின்றபோதுஇஸ்லாத்துக்குஎதிரானமேலைத்தேய உலகின் எதிர்ப்புகள் அன்று தொட்டு இன்று வரை பல்வேறு வடிவங்களில் தொடர்ந்துமேற்கொள்ளப்பட்டுவருவதைக்கண்டுகொள்ளமுடியும்.இவர்களது இத்தகையசெயற்பாடுகளினாலேயேமுழுஉலகிலும்வாழும்மக்கள்பல்வேறு வகையானபிரச்சினைகளைஎதிர்நோக்கிவருகின்றனர்.முஸ்லிம்களதுவீழ்ச்சி, பிரச்சினை, இழப்பு போன்றவற்றின் பின்னணியில் மேலைத்தேய சக்திகளின் ஆதிக்கம்ஏதோஒருவகையில்இடம்பெற்றுஇருப்பதைக்காணலாம்.

இத்தகையமேலைத்தேயசக்திகளின்செல்வாக்குநமதுநாட்டிலும் முஸ்லிம்களுக்குப்பல்வேறுபாதகங்களையும்பிரச்சினைகளையும்உண்டு பண்ணியுள்ளது எனலாம். இதனால் தான் இன்று வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்தமிழர்பிரச்சினைகள்வளர்ந்துபள்ளிவாசலிலும்கூடமுஸ்லிம்கள் படுகொலைசெய்யப்படுகின்றனர்.

இதேவேளை அதேகிழக்கு பகுதிகளில் தான் எல்லாம் இறைவனே என்ற அத்வைதீகக் கொள்கைகள் பரப்பப்பட்டு முஸ்லிம்கள் மத்தியில் பிளவுகள் உண்டு பண்ணப் பட்டும் வருகின்றன. அவ்வாறே நாம்புளுவை,

பஸ்யால போன்ற பகுதிகளில் சில காலங்களுக்கு முன்னர் தமிழில் தொழ வேண்டும்,ஹதீஸ்களை ஏற்றுக் கொள்ள முடியாது போன்ற கருத்துக்கள் ஒரு சிலரால் பரப்பப்பட்டது. இதன் பின்னணியிலும் மேற்கத்தைய சக்திகள் தமது பூரண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இஸ்லாமிய இராஜ்யம் என்றோ பூரணமாக இஸ்லாத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு நாடோ இல்லாத இக்காலகட்டத்தில் இஸ்லாம் விரோதச் செயல்கள் பலமாகப் பரவுவது நிச்சயம். இது வரலாறு போதிக்கும் சீரிய படிப்பினையாகும்.

எனவே இச்சந்தர்ப்பத்தில் ஈழத்து இஸ்லாமியர்களும் மேலைத்தேய விரோதச் சக்திகளின் இலக்குகளுக்கு உட்படாமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது உலமாக்களது இன்றியமையாத பொறுப்பாகும். சமகாலத்தில் தோற்றம் பெற்றுவரும் சவால்ளை முறியடித்து இஸ்லாத்தையும் இஸ்லாமியர்களையும் பாதுகாப்பதன் முக்கிய கடமை உலாமாக்களது கரங்களிலே காணப்படுகின்றன.

இப்பாரிய பொறுப்பை அல்குர்ஆன் சுன்னா போன்ற இஸ்லாத்தின் மூலாதாரங்களின் அடியாக நிறைவேற்ற முனைய வேண்டும். எழுகின்ற அனைத்து எதிர்ச் சக்திகளுக்கும் இவ்வடிப்படையின் அடியாக ஆய்ந்து ஏகோபித்த தீர்வுகளை வழங்க வேண்டும். சின்னஞ் சிறு சில்லறைப் பிரச்சினைகளில் தீவிரமாக ஆய்ந்து பிளவுபட்டு ஐக்கியத்தை இழந்து சமூகத்தின் ஒற்றுமையையும் சீர்குலைக்காத நிலையில் சமூகத்தின் அவசர அவசியப் பிரச்சினைகளுக்கு ஏகோபித்த தீர்வுகளை ஐக்கியமாக வழங்கி சமூகத்தைக் காப்பதற்கு முயற்சிக்க வேண்டும். இதுவே இன்று தேவை எனலாம்.

இஸ்லாமிய சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்று மேலைத்தேய சக்திகள் ஆதிக்கம் செலுத்தி வரும் இக்காலப் பிரிவில் மீண்டும் இஸ்லாத்தின் ஜோதியை ஏற்றி வைப்பதற்காக நாம் அடிமட்டத்திலிருந்து பல முயற்சிகளை மேற்கொள்ளுதல் அவசியமாகும். பின்வருவன போன்ற நடவடிக்கைகளை அதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

1. இஸ்லாத்துக்கு எதிராக எழும் அனைத்த சவால்களையும் ஆரம்பமாகவே ஆய்ந்து அறிந்து அடியோடு அகற்றி விடுவதற்கான நடவடிக்கைகளைக் கூட்டாகவும் தனிப்பட்ட ரீதியிலும் மேற்கொள்ளல்.
2. மேலைத்தேய சக்திகள் பல்வேறு கவர்ச்சி உருவங்களிலும் மறைவான அமைப்புகளிலும் செல்வாக்குச் செலுத்தி முஸ்லிம்களை வழி கெடுக்கலாம். இதற்கு விழிப்பாக நின்று கிராமரீதியாக நடவடிக்கைகளை எடுத்தல்.
3. பள்ளிவாசல்களை மையமாக வைத்து ஒவ்வொரு கிராமத்தையும் ஒன்றுபடுத்தி கிராமத்தில் காணப்படும் சில்லறைப் பிரச்சினைகளை தீர்த்து வைத்து மக்களை ஐக்கியப்படுத்தல்.

4. ஓர் ஊரில் அனைத்து மார்க்க ஏனைய விவகாரங்களையும் பள்ளி வாசல்களினூடாகஆய்ந்துதீர்ப்புக்களையும்தீர்வுகளையும்பெறல்.
5. இளம் பிராயத்தில் வைத்தே தமது சிறார்களுக்கு இஸ்லாத்தைத் தெளிவாகதெளிவானமுறையில்கற்பித்துக்கொடுப்பதோடுஇஸ்லாமிய பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் என்பனவற்றைப் புகட்டி நடைமுறையில்கொண்டுவரச்செய்தல்.
6. இஸ்லாத்தின் உயரிய கொள்கைகளையும் அதன் சிறப்பையும் அதனை அன்றாட வாழ்வில் அமுலுக்கு கொண்டு வருவதால் ஈருலகத்தில் கிடைக்கும்பலாபலன்களைப்பற்றியும்மக்களுக்குப்புரியச்செய்தல்.
7. பொதுசனத் தொடர்பு சாதனங்களுடாகவும் ஏனைய அனைத்து துறைகளுடாகவும் இயன்ற அளவில் இஸ்லாத்தை எடுத்துக் கூறி இஸ்லாத்துக்குஎதிரானசவால்களுக்குபதிலடிகளைக்கொடுத்தல்.
8. முஸ்லிம்கள்மத்தியில்கிராமமட்டத்திலும்தேசியமட்டத்திலும்சர்வதேச மட்டத்திலும்தோற்றம்பெறும்பிரச்சினைகளுக்குஏகோபித்தஉறுதியான ஆதாரபூர்வமானதீர்வுகளைவழங்கிஐக்கியத்தைப்பேணல்.
9. கல்வியறிவைஊட்டிசிந்தனைத்தெளிவைஅனைவர்மத்தியலும்உண்டு பண்ணல்.

இத்தகைய முறைகளை திட்டமிட்ட அடிப்படையில் தூய நோக்கில் மேற்கொண்டுவந்தால்நாம்பாதுகாக்கப்படுவதோடுஇஸ்லாத்தின்அனைத்து எதிர்ச்சக்திகளும் அழிக்கப்பட்டுவிடலாம். மேலும்மீண்டும்இவ்வுலகிலேஓர் இஸ்லாமிய இராஜ்யம் தோற்றம் பெறவும் முடியும். எனவே இத்தகைய உயர்பணியை உளத்திருப்தியோடு, உளத் தூய்மையோடு உயர் இலட்சியத்துடன்செய்யஅல்லாஹ்எம்அனைவருக்கும்துணைசெய்வானாக:

உசாத்துணை நூல்கள்
1. அல் அவாசிமு வல் கமாசிமு:- அபூபக்கர் இப்னுல் அரபி
2. 21வது நூற்றாண்டின் ஐரோப்பாவின் மார்க்கம்(பக்கம் 138)
3. அல் இஸ்ராக் வல் முஸ்ரிகூன்(பக்கம் 19)
4. விபரங்களுக்குப் பார்க்க அல் ஹரகாதுல் ஹத்தாமா
5. ரிஜாலுல் பிக்ர் வத் த:்வா அபுல் ஹஸன் அலி நத்வி
6. அஸ் ஸுன்னா வமகானது ஹா பித் தஸ்ரீஇல் இஸ்லாமி-
7. அல் பிதாயா வன் னிஹயா - இப்னுகதீர் பாகம் 13(பக்கம் 26)
9. ரிஜாலுல் பிக்ர் வந்த:்வா. அபுல் ஹஸன் அலி நத்வி
10. விரிவான விளக்கங்களுக்கு பார்க்க பிகஹல் ஸ்கா யூசுப் கர்ளாவி
11. ரிஜாலுல் பிக்ர் வத் த:்வா
12. ஜங்கிஸ் தான்(0பக்கம் 147)
13. ரிஜாலுல் பிக்ர் வத் த:்வா
14. அல் காமில் இப்னுல் அதீர்
15. ஐயமும் தெளிவும் முஹம்மது குதுப்(பக்கம் 12)
16. விபரங்களுக்குப் பார்க்க அல் இஸ்ராக் வல் முஸ்தஸ்ரிகூன்
17. விபரங்களுக்குப் பார்க்க அஸ் ஸுன்னா வமகானதுஹா.....
18. அமெரிக்க கலைக்களஞ்சியம்(பக்கம் 129)

# சமூக பொருளாதார அரசியல் நெருக்கடிகளும் உலமாக்களது பங்களிப்பும்

**அஷ்ஷெய்க் இனாமுல்லாஹ் நளீமீ பீ. ஏ.**
*முன்னாள் விரிவுரையாளர் -ஜாமியா நழீமிய்யா.*

**உலமாக்கள் என்போர் யார்?**

"அல்லாஹ் சுபஹானஹு வதஆலா மனிதர்களுள் தான் நேசிக்கின்றவர்களுக்கே ஷரிஆவுடைய ஞானத்தை வழங்குகின்றான். அவர்களைஇறைத்தூதர்களதுவாரிசுகளாகஇஸ்லாம்கருதுகின்றது.நிலத்தில் ஊர்ந்துசெல்லும்உயிரினங்கள்,வானில் உலாவரும்பட்சியினங்கள்,கடலில் வாழ்கின்ற மச்சங்கள் முதல் அனைத்துப் படைப்பினங்களும் இவர்களுக்காக பாவமன்னிப்புக்கோருவதோடுபிரார்த்தனையும்செய்கின்றன.வானவர்கள்தமது இறக்கைகளை இவர்களுக்காக விரிந்து கொடுக்கின்றனர். இவர்களது நித்திரையும் ஏனையோரின் நபிலான வணக்கங்களை விட உயர்ந்த அந்தஸ்த்தைப்பெறுகின்றது.இத்தகைய"ஆலிம்களும்ஆலிமல்லாதவர்களும் சமமானவர்களா? "ஆலிம்களது அந்தஸ்த்துகள் ஏகப்பட்டவை என அல்குர் ஆனில்அல்லாஹ்திட்டவட்டமாகக்கூறியுள்ளான்."

**தலைமைத்துவம் உலமாக்களுக்கு உரியதே:**

அல்குர்ஆனினதும்அஸ்ஸுன்னாவினதும்ஒளியில்பெறப்பட்டமேற்படி வரைவிலக்கணத்தை ஆராய்கின்ற போது நபிமார்களுக்கும், ரஸுல்மார்களுக்கும் பின்னர் மனித கோடியை வழிநடாத்துகின்ற மகத்தான தலைமைத்துவம்உலமாக்களிடமேஉத்தியோகபூர்வமாக அல்லாஹ்வாலும் இறுதித்தூதர் (ஸல்) அவர்களாலும் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ற திட்டவட்டமான முடிவிற்கே வர முடியும். நபிமார்கள் தீனார்களையோ, திர்ஹம்களையோ, சொத்துக்களையோ, செல்வங்களையோ, வாரிசுகளான உலமாக்களுக்கு விட்டுச் செல்லவில்லை. மாறாக அடுப்பங்கரை முதல் ஆட்சிபீடம் வரை அன்றாட வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டுகின்றஇறைமார்க்கம்இஸ்லாமியஷரீஆவையேவிட்டுச்சென்றார்கள். இதன்மூலம்தலைமைத்துவம்உத்தியோகபூர்வமாகஷரீஆவின்சட்டரீதியாக உலமாக்கள்எனும்உத்தமர்களிடம்கையளிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய உயரிய தலைமைத்துவ அந்தஸ்தைப் பெற்றுள்ள ஒரே காரணத்தால் தான் அல்குர் ஆனும் சுன்னாவும் இம்மையிலும் மறுமையிலும் உலமாக்கள் அடைகின்ற அந்தஸ்த்துக்களையும் கௌரவங்களையும் சித்தரித்துக்காட்டி உலக மாந்தர் மத்தியில் அவர்களுக்கென ஒரு தனித்துவத்தையும், கண்ணியத்தையும் பெற்றுக் கொடுக்க விளைகின்றன. இத்தகைய சிறப்பம்சங்கள் உலமாக்கள் அல்லாத வேறு எவருக்கும் இஸ்லாத்தால்வழங்கப்படவில்லை.

**இஸ்லாத்தில் அரசியல் கலக்கலாமா?**

ஏலவேகூறப்பட்டஇஸ்லாமியசிந்தனைகளைமேலோட்டமாகவேனும் அறிந்த எந்தவொரு புத்திஜீவியும் இத்தகைய ஒரு வினாவை எழுப்ப முடியாது என்பது திண்ணம். எனினும் சமூகத்தில் சில சந்தர்ப்பவாதிகளும் தலைமைத்துவத்தைத்தட்டிப்பறிக்கவிரும்புகின்றசூத்திரதாரிகளும்முட்டாள் தனமான இத்தகைய ஐயப்பாடுகளை பாமர ஜனங்களிடம் கிளப்பி விட முனைகின்றார்கள். இவர்களுக்கு நாம் கூற விரும்புவது ஒன்று தான்: இறைதூதர்களும் சஹாப்பாக்களதும் தூய வரலாற்றைச் சற்றுப் புரட்டிப் பாருங்கள். நபியவர்கள் கட்டியெழுப்பிய இஸ்லாமிய சமூக அமைப்பையும் மேற்கொண்ட யுத்தங்களையும், காட்டித் தந்த அழகிய அரசியல், சமூக, பொருளாதார,மானிடவாழ்வுமுறையையும்சீர்தூக்கிப்பாருங்கள்:நாற்பெரும் கலீபாக்கள் முதல் நபிவழி நடந்து நல்லாட்சி புரிந்த உமையா, அப்பாசிய, மம்லூக்கிய, உத்மானிய கிலாபத்துக்களைச் சேர்ந்த சில வரலாற்று நாயகர்களையும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் இதிகாசத்தையும் இவர்கள் மறந்து விட்டார்களா? அல்லது மேற்சொல்லப்பட்டவர்களை விடவும் வாக்காலும், வாழ்வாலும்ஷரீஆவுக்கு விளக்கம்தர வல்லவர்கள் இத்தகையசந்தர்ப்பவாத சுயநலமிகளும்,சூத்திரதாரிகளும்தானா?

தலைசிறந்த இமாம்கள் முஜ்தஹித்கள், முபஸ்ஸிரீன்கள், முஹத்தஸீன்கள், உஸுலிய்யீன்கள், முஅர்ரிகீன்கள் பாகங்கள் பாகங்களாகவரலாற்றுநூல்களையும்கோர்வைசெய்துவைத்துள்ளசட்டப் புத்தகங்களையும், பத்வாத் தொகுப்புக்களையும் ஆராய்வது ஒரு புறமிருக்கட்டும். உள்ளடக்கங்களின் தலைப்புகளை மாத்திரம் நுனிப்புல் மேய்தாலே இத்தகைய ஜாஹிலிய்யத்களுக்கு முற்றுப்புள்ளி வைத்திட முடியும்.

## ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சிகளும் நம்மவர் வீழ்ச்சியும்

உலக நாகரீகத்திற்கு வித்திட்ட இஸ்லாத்தின் வேகமான வளர்ச்சி வரலாறுநெடுகிலும்பலத்தபலசவால்களைஇடையறாதசவால்களைச்சந்தித்து வந்துள்ளது. யூதர்களதுசதிகள்ஒருபுறம்,கிறிஸ்தவசிலுவைச்சதிகள்மறுபுறம். இத்தகைய சதிகளையெல்லாம் இஸ்லாம் வெற்றிகரமாக முறியடித்தது. துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம்களது பலவீனத்தாலும், வீழ்ச்சியாலும் மங்கோலியர்களது படையெடுப்புடன் இஸ்லாமிய சாம்ராஜ்யம் சின்னாபின்னப்பட்டது. இத்தகைய வரலாற்று நிகழ்வுகளின் பின்னணிகளை ஆராய்ந்த இஸ்லாத்தின் விரோதிகள் திட்டவட்டமாக சில முடிவுகளுக்கு வந்தார்கள்.

இஸ்லாமிய வரலாற்றின்ஆரம்பத்தில் அல்குர் ஆனும், சுன்னாவும் முஸ்லிம்களது ஜீவநாடியாக இருந்தன. அத்தகைய ஜீவசக்திமிக்க முஸ்லிம்களைவீழ்த்துவதுவிரோதிகளுக்குஅசாத்தியமாகஇருந்தது.ஆனால் காலப்போக்கில் முஸ்லிம்களது வாழ்விலிருந்து அத்தகைய உயிரோட்டம் தூரமாகிய போது எதிரிகளின் பக்கம் வெற்றி திரும்பியது. ஆனால் அல்குர்ஆனும், சுன்னாவும் அதே ஜீவசக்தியை அகத்தே கொண்டிருந்தன. முஸ்லிம்கள் அல்குர்ஆனிடமும் சுன்னாவிடமும் மீளாது தூரமாக்குவதே மீண்டும் இஸ்லாமிய எழுச்சி ஏற்படுவதனைத் தடுப்பதற்குள்ள ஒரே மார்க்கம் எனத்திட்டவட்டமாகத்தீர்மானித்தனர்.

இத்தகைய சூழ்ச்சிகளின் கசப்பான தவிர்க்க முடியாத விளைவே ஆத்மீகம் வேறு, அரசியல் வேறு என்ற சிந்தனைப் போக்கு முஸ்லிம் உலகில் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் தோற்றம் பெறுவதற்குக் காரணமாகஅமைந்தது.

இஜ்திஹாதின்வாயல்இழுத்துமூடப்பட்டது.

காலத்துக்குக் காலம் தோன்றுகின்ற தேவைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் ஈடு கொடுத்து அவ்வப்போது இஸ்லாமிய சட்ட விளக்கங்களை வழங்குகின்ற இமாம்களது இஜ்திஹாத் பணிக்கு சாவுமணி அடிக்கப்பட்டது. பாரசீக, இந்திய, கிரேக்க தத்துவ ஞானங்களின் கெடுபிடிகளுக்கும், சர்ச்சைகளுக்கும், முஸ்லிம் உலகம் பலியாகியது. இஸ்லாத்தில்துறவறம்என்றபுதியகோட்பாடும்ஷரீஆவில்இல்லாதவழிபாட்டு நூதனஅனுஷ்டானங்களும்,கிரியைகளும்முஸ்லிம்கள்மத்தியில்ஊடுருவிச் செல்வாக்குச்செலுத்தின.

இறைவனது கலீபாவாக வாழ்க்கைப் போராட்டத்தில் துணிகரமாக ஈடுபட்டசக்திமிகுவிசுவாசிஉயிரோட்டமிழந்தசந்நியாசியாகமுடக்கப்பட்டான். நீண்டஆய்வைவேண்டும்இவ்வம்சம்பற்றியதெளிவானஒருவிளக்கத்துக்காக தலைசிறந்த நவீன இஸ்லாமிய சிந்தனையாளர்களுள் ஒருவரான வடஇந்திய தாருல்உலூம்,நத்வதுல்உலமாபல்கலைவேந்தர்மௌலானாஅபுல்ஹஸன் அலி அந்நதவி அவர்களால் எழுதப்பட்ட பிரசித்தமான ”முஸ்லிம்களது வீழ்ச்சியால்உலகம்இழந்ததுஎன்ன?”என்றநூலைச்சிபாரிசுசெய்யலாம்.

**இஸ்லாமியக் கல்வியிலும் கலையகங்களிலும் ஏற்பட்ட தாக்கம்**

இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்ப காலங்களில் இஸ்லாமியக் கல்வி விரிந்த அடிப்படைகளைக் கொண்ட சமுதாயத்தின் அரசியல், சமூக, பொருளாதார,கலாச்சார,பண்பாட்டு,மானிடத்தேவைகளுக்குஈடுகொடுக்கக் கூடியவிதத்தில்இஸ்லாமியக்கல்விஅமைந்திருந்தது.இத்தகையவளர்ச்சிப் போக்கை இமாம்களது சட்ட நூல்களின் எண்ணிக்கையையும், தரத்தையும் குறிப்பாக பத்வாத் தொகுப்புக்களின் விசாலத்தையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது. குறிப்பாக உஸுல் பிக்ஹு நூல்கள் இவ்வுண்மையை நன்கு தெளிவுபடுத்துகின்றது.இவ்வுண்மையைதெளிவுபடுத்தஉதாரணம்கூறுவது அவசியமற்றதெனினும்ஒருசிறியஉதாரணத்தைமுன்வைப்பதன்மூலம்அதன் யதார்த்தபூர்வத்தைதெளிவுபடுத்தலாம்.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்களது ”முவத்தா”எனும் கிரந்தத்தை கலீபா மன்சூர் அரசியல் சாசனமாக அங்கீகரிக்க அனுமதி கேட்டமையும் இமாமவர்கள் அனுமதி வழங்க மறுத்ததனையும் கூறலாம். இமாம் மாலிக் அவர்கள் தனது சட்டவிளக்கங்கள் தான் முடிவான, தீர்க்கமான அந்தஸ்துடையவை என்று கருதவில்லை.இதிலிருந்துஇரண்டுஉண்மைகளைத்தெரிந்துகொள்ளலாம்.

1) அக்கால அரசியல், சமூக, பொரளாதார தேவைகளுக்கு உலமாக்கள் ஈடுகொடுத்தனர்.
2) இமாம்மாலிக்தவிர்ந்தஏனையஇமாம்கள்,முஜ்தஹித்கள்சமகாலத்தில் இத்தகைய பணிகளைச் செய்யுமளவு இஸ்லாமிய கல்வியின் தரம் அமைந்திருந்தது.

இந்த வகையில் நாற்பெரும் இமாம்கள் அவர்களது மாணவர்கள் மாத்திரமல்லாது இமாம் இப்னுதைமியா, இமாம் இப்னு அப்துல் ஸலாம், இமாம் மாவர்தீ,இமாம்இப்னுருஷ்த்,ழாஹிர்மத்ஹபின்ஸ்தாபகர்கள்,இமாம்கஸ்ஸாலீ, இமாம் நவவீ போன்ற எண்ணிலடங்காத அறிஞர்களது சேவைகளை பட்டியல்

போட்டுப் பார்க்க முடியும். மத்தியாசிய நாடுகளில் மாத்திரமன்றி கிழக்காசிய நாடுகளிலும் இத்தகைய தராதரத்தை இஸ்லாமிய கல்வி அமைத்திருந்தது. "அல்பதாவா அல்ஹுஃறின்திய்யா அல்குப்ரா"போன்றசட்டத்தொகுப்புக்களையும் இந்தியாவிலும்பாகிஸ்தானிலும்ஆப்கானிஸ்தானிலும்தோற்றம்பெற்றஅறிஞர்-களதும், இமாம்களதும் அறபு உருது மொழிகளாலான சட்டத் தொகுப்புக்களையும்அவதானிக்கும்போதுஇவ்வுண்மைதெளிவாகின்றது.

ஆனால் முஸ்லிம்களது பலவீனத்தாலும், ஏகாதிபத்தியவாதிகளது செல்வாக்கினாலும்இஜ்திஹாத்பணியில்ஏற்பட்டஸ்தம்பிதத்தினாலும்இஸ்லாமிய வரலாற்றில் இஸ்லாம் வேறு அரசியல் வேறு என்ற ஆத்மீக சித்தாந்தமொன்று ஆதிக்கம்செலுத்தியதாலும்இஸ்லாமியக்கல்விபெரிதும்பாதிப்புற்றது.

**கீழைத்தேய நாடுகளில் மதரஸாக் கல்வி முறை :**

முஸ்லிம்உலகில்இஸ்லாமியசிந்தனையிலும்,கல்விக்கோட்பாட்டிலும் ஏற்பட்ட தாக்கங்கள் இஸ்லாமியத் தலைவர்களை வெகுவாகப் பாதித்தன. ஆட்சியிலிருந்தும் அதிகாரத்திலிருந்தும் இஸ்லாம் தூரமாக்கப்பட்ட போது இஸ்லாமிய தலைவர்களின் சேவைகளும் பங்களிப்புகளும் தேவைகளும் வரையறுக்கப்பட்டன. குறிப்பாக கீழைத்தேய நாடுகளில் இதன் தாக்கம் நன்கு பிரதிபலிக்கஆரம்பித்தது.இஸ்லாமியமூலாதாரநூல்கள்ஒதுக்கிவைக்கப்பட்டன. இமாம்களின்மூலநூல்கள்கூடஒதுக்கப்பட்டன.அறபு,இலக்கணம்,சிலகுறிப்பிட்ட சட்டவிளக்கவிரிவுரைகள் ஒருசிலவிரிவற்றத.்ப்ஸீர்நூல்கள்போன்ற நூல்களைக் கொண்ட கல்வித் திட்டங்களுடன் மத்ரஸாக்கள் தமது பாடவிதானத்தைச் சுருக்கிக் கொண்டன. விரிவான ஆராய்ச்சிப் பணிகளையோ துறைரீதியானஆழமானகல்வியினையோஇவற்றால்வழங்கமுடியவில்லை.

அரசியல், சமூக, பொருளாதார, மானிடத் தேவைகளுக்காக ஆலிம்களும், மதரஸாக்களும் நாடப்படாததனால் கேள்விக்கு ஏற்ற நிரம்பலாக ஆத்மீகரீதியிலானபங்களிப்புக்களைமாத்திரமேஇஸ்லாமியகலையாக்கங்கள் செய்தன.

நவீன சிந்தனைகளுக்கும், வாழ்க்கைக் கோட்பாடுகளுக்கும் மாற்றீடாக இஸ்லாமிய ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமும்தேவையும்மதரஸாக்களுக்கு இருக்கவில்லை. இதன்விளைவாக குறிப்பாக கீழைத்தேய நாடுகளில் பயிலும் மதரஸா மாணவர்களுக்கும் வெளியுலக வாழ்விற்கும் இடையேயுள்ள தொடர்புகள் முற்றாகவே துண்டிக்கப்பட்டுள்ளதுர்ப்பாக்கியநிலைஏற்பட்டுள்ளது.

**உதாரணத்திற்காக சில சமகாலப் பிரச்சனைகள்**

இன்று இஸ்லாமிய பொரளாதார முறை பற்றிப் பரவலாகப் பேசப்படுகின்றது. ஆனால் நவீன பொருளாதார சித்தாந்தங்களுக்கும் நடைமுறைகளுக்கும்மாற்றீடாகஅதனைநாம்முன்வைப்பதாயின்முதலாவதாக நாம்மொழிப்பிரச்சினையைஎதிர்நோக்குகின்றோம். ஆங்கிலமொழியேஇன்று ஆராய்ச்சிமொழியாகவும்நவீனதொழில்நுட்பத்தின்மொழியாகவும்உள்ளது. இரண்டாவதாக எமது பொருளாதார, வணிகத்துறை நிபுணர்களுக்கு இஸ்லாமியக்கோட்பாடுகள்தெரியாது. கொள்கைகளும்சட்டவிளக்கங்களும் தெரிந்தவர்கள்இருந்தாலும்அவர்களிடம்நவீனநிபுணத்துவம்கிடையாது.

இஸ்லாமிய தனியார் சட்டத்தை மீள் பரீசீலனை செய்வதை எடுத்துக் கொண்டாலும்அங்கும்மொழிப்பிரச்சினை, சட்டப்பிரச்சினைசட்டத்தரணிகளின் கல்விப் பின்னணி என்பவற்றினால் பல சிக்கல்களை நாம் எதிர் நோக்க வேண்டியுள்ளது.

தமிழ் மொழியில் தான் நாம் பூர்வாங்க ஆராய்ச்சிகளை மேற்கொள்வதாகவைத்துக்கொண்டாலும்முற்றும்முழுவதும்மரபுரீதியிலான எமது மார்க்க அறிவு நவீன இஸ்லாமிய ஆராய்ச்சிப் பின்னணி மொழித்திறன் ஆகியவற்றால்தோன்றும்இயலாமைகள்தவிர்க்கமுடியாதவையாகவுள்ளன.

இன்றுமுஸ்லிம்உலகில்ஏற்பட்டுள்ளஇஸ்லாமியஎழுச்சிகாரணமாகப் பல்வேறு துறைகளிலும் இஸ்லாமிய ஆராய்ச்சிப் பணிகள் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. ஆனால்எத்தனைஇஸ்லாமியக்கலையகங்களுக்கும்நவீன இஸ்லாமிய எழுச்சிப் பின்னணிகளுக்கும் ஆராய்ச்சிப் பணிகளுக்கும் அறிஞர்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் இடையே தொடர்புகள் உறவுகள் இருக்கின்றனஎன்பதும்கேள்விக்குரியவிடயமாகும்.

இன்று இலங்கையில் முஸ்லிம்களது அடிப்படை உரிமைப் பிரச்சினைகள் பற்றிப் பரவலாக குரல் எழுப்பப்படுகின்றது. போராட்டங்கள் மேற்கொள்ளப் படுகின்றன. இவை பற்றிய பூகோள மானிட வரலாற்றுப் பரிமாணங்களும்சட்டத்தெளிவுகளும்ஆய்வுப்பின்னணிகளும்எமதுமதரஸாக் கல்வி முறையில் எத்தகைய இடத்தை வகிக்கின்றது? இன்று சர்வதேச நவீன சவால்களை முஸ்லிம் உலகம் எதிர் கொண்டுள்ளது. முஸ்லிம் உம்மத்தின் பங்களிப்புக்கள்என்ன? நவீனபோராட்டயுக்திகளும்வடிவங்களும்எவை? யூத கிறிஸ்தவ சக்திகள் இஸ்லாமிய உலகில் ஊடுருவச் செய்யும் சதிகள்

எத்தகையவை? என்பவை பற்றியெல்லாம் ஷரீஆ மாணவர்களுக்கு அறிவூட்டப்படுவதில்லை.

**உலமாக்களைக் குறை கூற முடியுமா?**

வரலாற்றில் இடம் பெற்ற கசப்பான நிகழ்வுகளினாலேயே இன்றைய மத்ரஸாக்களதும் உலகமாக்களதும் பங்களிப்புக்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன. இதற்காகப் பெரும் நம்பிக்கைகளோடும், ஆர்வத்தோடும், தியாகங்களோடும் ஏழு அல்லது எட்டு வருடங்களை மத்ரஸாக்களில் கழித்து விட்டு வெளியேறியவுடன் சமுதாயமிட்ட சட்டங்களும், சடங்குகள், சம்பிரதாயங்களுக்கும்அடிமைகளாக்கப்படுகின்றஉலமாக்களைஒருபோதும் குறைகூறமுடியாது.

இன்றுஅவர்கள்தமதுபொருளாதாரவாழ்வில்கூடஅண்டிப்பிழைக்கும் நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். மத்ரஸா மாணவர்கள் கூட சுயமாகத் தமது எதிர்காலத்தைஅமைத்துக்கொள்வதுபற்றியநம்பிக்கையினைஇழந்துள்ளனர். இதன் காரணமாக சுதந்திரமாக சிந்திக்கின்ற, கருத்து வெளியிடுகின்ற, சத்தியத்தைத் தயங்காது எடுத்துச் சொல்கின்ற சமூகத்தில் மார்க்கத்தின் பெயரால் மலிந்துள்ள மூட நம்பிக்கைகள் பித்ஆத்துக்கள் ஷிர்க்குகள் ஆகியவற்றை எதிர்த்துப் போராடுகின்ற துணிச்சலையும் வல்லமையையும் அவர்கள்இழந்துள்ளனர்.

நிச்சயமாக இத்துர்ப்பாக்கிய நிலைக்கு அவர்களைக் குறை கூறமுடியாது. மாறாக வரலாற்றில் எம்மீது திணிக்கப்பட்ட கதிகளையும், சமூக அநீதிகளையும்நாம்புரிந்துசெயற்படவேண்டும்.

ஆனால், இந்நிலையிலிருந்து நாம் மீள வேண்டும். திட்டமிட்ட அடிப்படையில்எமதுஇஸ்லாமியக்கலையகங்களையும்சமூகத்தையும்அழிவுப் பாதையிலிருந்து மீட்கும் இலட்சியப் போராட்டத்தை நாம் மேற்கொள்ள வேண்டும். இதுவே இன்று உலமாக்கள் முன்னுள்ள அவசரமும், அவசியமும், முதன்மையானதுமானபணியாகும்.

உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

1) உலமாக்களுக்கான இடைக்காலப் பயிற்சி நெறிகள், கல்வி முகாம்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் மூலம் சமகாலச் சவால்களுக்கும்

ஈடுகொடுப்பதற்கான ஊக்கத்தையும் வல்லமையையும் ஏற்படுத்த வேண்டும்.

2) சகல விதமான பொருளாதார அடிமைத்தனங்களிலிருந்தும் உலமா சமூகத்தை விடுவித்து சுயமாக தமது பொருளாதார வாழ்வை அவர்கள் ஸ்திரப்படுத்துவதற்கானசெயற்திட்டங்களைநடைமுறைப்படுத்தல்

3) சர்வதேச இஸ்லாமிய நிறுவனங்களுடன் திட்டமிட்ட அடிப்படையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் நவயுக இஸ்லாமிய எழுச்சியுடன்உலமாக்களைத்தொடர்புபடுத்தல்.

4) எதிர்கால சந்ததிகளின் நலன் கருதி இஸ்லாமியக் கலையகங்களின் பாடவிதானங்களை சமகாலத் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தரப்படுத்துதல்.

5) சர்வதேச இஸ்லாமியயல்கலைகளில்கற்றபட்டதாரிகளையும்அறபைத் தாய் மொழியாகக் கொண்ட விரிவுரையாளர்களை கலையகங்களில் நியமித்தல்.

6) மதரஸாக்களுக்கான உயர் சம்மேளனம் ஒன்று நிறுவப்படுவதோடு அதிகரித்துவரும்மதரஸாக்களின்தராதரங்களைநெறிப்படுத்தவேண்டும்.

7) துறைரீதியானகல்வித்திட்டங்களையும்நவீனகற்பித்தல்சாதனங்களையும் அனுகுமுறைகளையும் கொண்ட இஸ்லாமிய உயர்கல்வி ஸ்தாபனமொன்றைசர்வதேசதரத்தில்நிறுவுதல்.

8) தற்போதுள்ள மதரஸாக்களில் பயிலும் மாணவர்களது நலன் கருதி சமகாலத் தேவைகளையும், சவால்களையும், தேசிய சர்வதேசய விவகாரங்களையும் அறிந்து கொள்வதற்காகக் குறைந்த பட்ச தகுதி வாய்ந்தவர்களைக்கொண்டுஒருபொதுஅறிவுப்பாடமேனும்அறிமுகம் செய்யப்படுதல்வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளை அகில இலங்கை ஜம்மிதுல் உலமா போன்ற ஒரு ஸ்தாபனம் நிலையானதொரு தலைமையகத்தினூடாக திட்டமிட்ட விரிவான அடிப்படைகளில் மேற்கொள்ள வேண்டும். இன்ஷா அல்லாஹ். இத்தகைய முயற்சிகளுக்கு அல்லாஹ்வின் அருளும் தேசிய சர்வதேசிய ஸ்தாபனங்களதுஒத்துழைப்பும்வரவேற்பும்நிச்சயமாககிடைக்கும்வாய்ப்புக்கள் நிறையஉள்ளன.

**சமகாலத்தில் எத்தகைய பங்களிப்பினைச் செய்யலாம்?**

இதுவரையிலும் கூறப்பட்ட சிந்தனைகள் பொதுவானதொரு கண்ணோட்டத்தையேமையமாகக்கொண்டுள்ளன.சமூகத்தில்விதிவிலக்கான

திறமையும் ஆற்றலும் சமூக உணர்வும் புதிய சிந்தனைகளும் கொண்ட சுய முயற்சியில் உருவான அறிஞர்களும் உலமாக்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.சிலர் இலைமறைகாய்களாகவேஇருக்கின்றனர்.இவர்கள் இனம்காணப்படவேண்டும்.இத்தகையஅவர்களதுதலைமைத்துவத்தில்சகல த.ஃ.வா அமைப்புக்களையும் ஒன்றிணைக்கக் கூடிய அமைப்பு முறை ஒன்று உருவாக்கப்படல்வேண்டும்.

அதே போல் முஸ்லிம் அரசியற் கட்சிகள், சமூக, பொருளாதார அரசியல்துறைகளில்ஈடுபாடுள்ளமுஸ்லிம்ஸ்தாபனங்களும்இயக்கங்களும் காணப்படுகின்றன. இவற்றின் பிரதிநிதிகள் ஒன்றிணைத்த அமைப்பு முறையொன்றையும் உலமாக்கள் தமைமைத்துவத்தில் ஏற்படுத்த வேண்டும்.

இவர்களுக்கிடையே சுதந்திரமான கருத்துப் பரிமாற்றங்கள் இஸ்லாமிய சூழலில் மிகக் கௌரவமாகவும் ஷூரா முறையிலும் இடம் பெறுவதற்கானவழிவகைகளைஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.அதன்மூலம் சமுதாயம் எதிர் நோக்கும் பொதுவான பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

இத்தகைய முயற்சிகளால் சமுதாயத்திற்கு தூய்மையான சிறந்தொரு தலைமைத்துவத்தை வழங்க முடிவதோடு வாழ்க்கைப் போராட்டத்தில் உலமாக்களையும் ஈடுபடச் செய்ய முடியும். இஸ்லாமிய சிந்தனைகளுக்கும் சட்டதிட்டங்களுக்குமான தேவைகளும் கேள்விகளும் அதிகரிக்கும். உலமாக்களதும் மத்ரஸாக்களதும் அறிவுப் பின்னணி விருத்தியடையவும் மீண்டும் உன்னதமான இஸ்லாமிய தலைமைத்துவம் படிப்படியாகவும்துரிதமாகவும்வளர்ச்சியுறும்.

உலமாக்கள் அரசியல் கட்சிகளின் பின்னால் ஓடித்தான் சமுதாயத்திற்கு வழிகாட்ட வேண்டும் என்பதில்லை. மாறாக அரசியற் தலைவர்களையும் நெறிப்படுத்துகின்ற உயரிய பணியை உலமாக்களால் செய்ய முடியும். நாளடைவில் முஸ்லிம்கள் யாவரும் உலமாக்களின் தலைமைத்துவத்தையேநம்பிவழிப்படுமளவுக்கு அல்லாஹ்வின் உதவியும் அருளும்கிட்டும்.

மீண்டும் உலமாக்கள் உரிய அந்தஸ்துக்களை அடைவார்கள். கிராத்ஓதிஆரம்பித்தும்ஸலவாத்கூறிமுடித்துவைக்கும்பணிகளுடன்நின்று

விடாது தலைமைத்துவப் பணிகளில் முழுமையாக தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள். அவர்களது கௌரவமும், கண்ணியமும் உயர்ந்து செல்லும். சமுதாயம் இஸ்லாத்தின் இனிய நிழலில் எழுச்சி பெறும்.

**உலமாக்களது தலைமைத்துவம் என்றேனும் தோன்றியே ஆகவேண்டும்.**

இஸ்லாம் வேண்டுகின்ற உன்னதமான உலமாக்களின் தலைமைத்துவம் உருவாவதற்கான உடனடி நடவடிக்கைகளாகவே மேற்கொள்ளப்பட்டவைகள் கருதப்படவேண்டும். ஏனெனில் சூனியத்திலிருந்து எதுவும் தோற்றம் பெறுவதில்லை என்பது தெளிவு.

இன்ஷா அல்லாஹ். எதிர்காலத்தில் உலமாக்களது தலைமைத்துவம் கீழ் சமுதாயம் வழிநடத்தப்படல் வேண்டும். வாழ்வின் அனைத்துத் துறைகளையும் இஸ்லாமிய ஷரீஆ கட்டுப்படுத்த வேண்டும். அத்தகைய வல்லமையும் ஆற்றலும் கொண்ட தலைமைத்துவத்தைத் தோற்றவிக்க நாம் போராடுவதும் உழைப்பதும் எம்மீது விதிக்கப்பட்ட தலையாய கடமையாகும்.

அதுவரை தடியெடுத்த வேடர்களையும் வேதம் ஓதும் பூதங்களையும் அனுசரித்து அமைதியாக எமது போராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இன்றேல் முளையிலேயே எமது போராட்டத்தை முறியடிப்பவர்கள் வேறு யாருமில்ல. எம்மைச் சேர்ந்தவர்கள் தான் என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை. மஸ்ஜித்கள் நீதிபரிபாலனம் செய்யும் மிம்பர்கள் ஆட்சிபுரியும் அத்தகைய எதிர்காலத்தை நோக்கி ஐக்கியமாகவும் புரிந்துணர்வுடனும் எமது இலட்சியப் பயணத்தை மேற்கொள்வோமாக:

# யுகத்தின் தேவைகளும் மத்ரஸா கல்வி முறையும்

மௌலவி எஸ்.எம்.எம்.நஸீர் (மாலி) பீஜாம்

அமைதி, நிம்மதி, சமாதானம் இதுதான் இன்றைய உலகத்தின் அவசரத்தேவை.தினம்உருவெடுக்கும்தீராதபிரச்சினைகள்கணக்கில்அடங்கா: ஆம் நவீன யுகம் தோற்றுவித்துள்ள பிரச்சினைகளும் எண்ணில் அடங்காதவையாகும்.

மனித இனத்தின் எழுச்சிக்கும் அமைதிக்கும் விஞ்ஞானம் வழி சமைக்கும்என்றநம்பிக்கையானதுநவீனயுகத்தின்ஆரம்பத்தோடுஅஸ்தமமாகி விட்டது.பிரச்சினைகளைவர்க்கவிரிசலெனக்கூக்குரலிட்டுசமத்துவசமுதாயம் அமைக்கப்புறப்பட்டவர்கள்மறுசீரமைப்புக்கும்,ஒளிவுமறைவின்மைக்குள்ளும் ஓடிஒழிந்துகொண்டார்கள்.

அமைதிக்கும்சமாதானத்திற்கும்வழிகாட்டவேண்டியமார்க்ககல்விக் கூடங்கள் 6ம் நூற்றாண்டைத் தாண்டி ஓரடி அடி எடுத்து வைக்கவும் தயங்கி கொண்டு காலம் கடத்துகிறது. ஆம் இலங்கையில் உள்ள மார்க்க கல்வி கூடங்களின் பாடத்திட்டங்களை ஆராய்ந்து பாருங்கள்: இஸ்லாமிய சரித்திரப்பாடம்உமையாக்களின்ஆட்சிக்காலத்தைதாண்டியதுஉண்டா?அரபு நாட்டின் வரலாற்றை நான்கு கலிபாக்களின் ஆட்சிக்குப்பின் ஆராய்ந்து பார்த்ததுண்டா?அரபுஇலக்கணத்துக்கும்அதேகதிதான்.அரபுஇலக்கணத்தை நவீன முறையில் பயிற்றுவிக்கும் நூல்களே தோன்றவில்லையா? இன்றும் ஏன் பழையநூல்களையேகட்டிக்கொண்டுஅழவேண்டும்.

ஆம் அரபு மத்ரசாக்கள் ஆறாம் நூற்றாண்டைத் தாண்டுவதற்கே சங்கடப்படுகின்றன. இலங்கையில் உள்ள அரபு மத்ரஸாக்களுக்கு 20ம் நூற்றாண்டில் அக்கறை இல்லை. 6ம் நூற்றாண்டில் தான் அதனது சிந்தனைகள் சுழன்றுகொண்டுஇருக்கின்றன.அதனால்தான்நவீனயுகத்தின் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் முடங்கிக் கொண் இருக்கின்றது.

இன்றைய பிரச்சனைகளுக்கு ஒரே தீர்வு இஸ்லாம் மாத்திரமே என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே இந்த இஸ்லாத்தை போதிக்கின்ற மார்க்கக் கல்வி கூடங்கள்6ம்நூற்றாண்டில்இருந்துவெளியேவராதவரை இன்றையபிரச்சினைத் தீர்வுக்கு வழிகாட்ட வேறு யாருமே இல்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

எனவே இதனடிப்படையில் இஸ்லாம் பற்றிய தெளிவானதோர் கருத்து மார்க்க கல்விக் கூடங்களில் உருவாக்கப்பட வேண்டும். இஸ்லாம் என்பது வெறும் சடங்குகளின் அமைப்பல்ல என்பது தெளிவாக்கப்படவேண்டும்.

இஸ்லாம் காட்டும் வாழ்க்கை நெறிமுறை ஒவ்வொன்றும் தனித்தனியே பொருளியல், அரசியல், சட்டம், வர்த்தகம், தொழிலாளர் நலச்சட்டம், வரலாறு சமூகவியல் உளவியல் தத்துவம் என்று நன்கு வகைப்படுத்தப்பட்டு தனித்தனி பாடங்களாக மார்க்க கல்விகூடங்களில் போதிக்கப்படவேண்டும்.

**பொருளியல்**

பாடசாலையில் பொருளாதாரத்தை எடுக்கும் மாணவன் கம்யூனிசப் பொருளாதாரத்தையும் முதலாளித்துவ பொருளாதாரத்தையும் அலசி ஆராய்கின் றான். ஆனால் மார்க்க கல்வி கூடங்களில் பயிலும் மாணவன் எட்டாண்டுகள் படித்தும் பொருளாதாரம் பற்றி எதுவும் அறியாதவனாக வெளியே வருகிறான். ஏன் இஸ்லாம் பொருளாதாரம் பற்றி எதுவும் கூறவில்லையா? பொருளியல் அமைப்பு , பொருளாதார திட்டமிடல் பற்றிய கருத்தோட்டம் இஸ்லாத்தில் இல்லையா? இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இஸ்லாத்தின் ஆழத்தைப் புரிந்து கொண்டு அதன் உட்கருவை வெளிக்கொணர்ந்து நவீன யுகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வளிக்க மார்க்க கல்விக் கூடங்கள் தயாரில்லை.

இதோ பாருங்கள். நவீன பொருளாதாரத்தை ஆட்டிப்படைக்கும் மிகசக்தி வாய்ந்த காரணியாக வட்டி திகழ்கின்றது. இவ்வட்டியினை இஸ்லாம் தடை செய்துள்ளது என்பதை மார்க்க கல்விகூடங்கள் படித்துக்கொடுக்கின்றன. ஆனால் அதன் சாதக நிகழ்வுகள் பற்றிய ஆய்வினை மார்க்க கல்விகூடங்களில் போதித்துக் கொடுப்பதுண்டா? வட்டியில்லா பொருளாதார அமைப்பினால் ஏற்படும் நன்மைகள் பற்றிய விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டதுண்டா? வட்டி இல்லா வங்கியினை நிறுவுவதற்கான வழிமுறைகளை போதனை செய்ததுண்டா? வட்டியும் வியாபாரமும் ஒன்று தான் என வாதிப்போருக்கு அவற்றின் பாகுபாட்டினை தெளிவு படுத்தும் ஆய்வினை ஊக்குவிக்கும் கல்வித்திட்டம் உண்டா? இஸ்லாம் வட்டியை ஹரமாக்கியதோ பெரியதோர் பொருளாதார மேம்பாட்டுத்திட்டமன்றோ? இது பற்றிய ஆய்வு மார்க்கக் கல்வி கூடங்களில் ஏன் நிகழ்த்தப்படக் கூடாது. வட்டி இல்லா அமைப்பு உற்பத்தி அதிகரிப்புக்கும் நியாய விலைக்கும் வழிகோலுகின்றது. மேலும் பல்வேறுபட்ட இலாபம் நிச்சயமில்லாத முயற்சிகளிலும் துணிந்து ஈடுபட வழி சமைக்கிறதல்லவா? இவை பற்றிய ஆய்வுகள் இடம்பெற வேண்டாமா? பயன் (utility) என்ற சொல்லுக்கு வெறும் திருப்தி (satisfaction) என்று வரைவிலக்கணம் செய்கிறது முதலாளித்துவப் பொருளாதாரம்.

ஆனால், இஸ்லாமியப் பொருளாதாரம் பயன் என்ற சொல்லுக்கு யதார்த்தரீதியானபயனைஅதுகொண்டிருக்கவேண்டும்என்றுவற்புறுத்துகிறது. மனிதர்களின் உடலுக்குத் தீங்கிளைக்கும் எந்தப் பொருளும் மனிதனுக்கு திருப்தியளிக்கின்றது என்ற அடிப்படையில் அதுவும் பயன் எனக் கருதி உற்பத்தி செய்யப்படக் கூடாது என்று தடை செய்து அவற்றினை தண்டனைக்குரிய குற்றமாகவும்ஆக்கியுள்ளமைஇஸ்லாமியபொருளாதாரஅமைப்பின்தன்னிகரற்ற தன்மைக்கு சான்றல்லவா? இஸ்லாமிய பொருளாதார அமைப்பில் மதுபானம், விபச்சாரவிடுதி,சூதாட்டம்இவைபோன்றவைக்குதடைவிதிக்கப்பட்டமைஇங்கு கவனிக்கத்தக்கதாகும்.

**இஸ்லாமிய பொருளாதார அமைப்பில் சில சிறப்பம்சங்களாவன:-**

1. கடன்கொடுத்தல்ஊக்குவிப்பு
2. ஆடம்பர மற்றும் வீணான உற்பத்திக்கான செலவுகள், அத்தியாவசிய தேவைக்கானஉற்பத்தியில்ஈடுபடுத்தப்படவகைசெய்தல்.
3. விலைப்பொறி முறைப் பொருளாதார அமைப்பில் அத்தியாவசியப் பொருட்களைபதுக்கிஇலாபம்உழைக்கும்போக்கைத்தடைசெய்தல்.
4. பொருளாதார ஏற்றத்தாழ்வை தீர்க்க ஏழை வரித்திட்டத்தினை அமுல் செய்தல்.
   ஏழைவரிநிதியத்தின்மூலம்தொழில்வாய்ப்பினைஏற்படுத்தல்.அகதிகளின் துயர்துடைத்தல்.
   நாட்டுமக்களின்வாழ்க்கைத்தரத்தினைஉறுதிசெய்தல்.
5. சமூகத்தில் உழைப்பினை வழங்க முடியாத ஊணமுற்றோரினைப் பராமரிக்கவகைசெய்தல்.

இப்படிப் பாரிய பொருளாதாரத் திட்டங்களை இஸ்லாம் தெளிவுபடக் கூறியிருந்தும்இஸ்லாமியப்பொருளாதாரம்பற்றிநன்குஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு பாட நூலை மார்க்க கல்வி கூடங்களில் அறிமுகப்படுத்தி மாணவர்களை நவீன யுகத்தின் பிரச்சனைகளுக்கு முகங் கொடுக்க கூடியவர்களாக ஆக்கி இருக்கவேண்டாமா?

இதோ இஸ்லாமியப் பொருளாதார அமைப்பினை வலியுறுத்தும் இரண்டுகுர்ஆன்வசனங்களினைஉங்கள்சிந்தனைக்குவிடுகிறோம்.

"உண்ணுங்கள்பருகுங்கள்வீண்விரயம்செய்யாதீர்கள்"

"அந்ததினத்திலே உங்களுக்கு கொடுக்கப்பட்ட அனைத்து அருட் கொடைகள் பற்றியும் வினவப்படுவீர்கள்"

மனித இனத்திற்கு பயன்படக்கூடியவற்றை வீண் விரயம் செய்யாதீர்கள். உங்களுடைய சொத்துக்கள் பற்றியும், அவற்றை எப்படிப் பயன்படுத்தினீர்கள்

என்பது பற்றியும் வினவப்படுவீர்கள் மேலும் உங்களுக்கு இறைவன் அளித்தவற்றில் மக்களுக்கு நன்றாக செலவு செய்யுங்கள் சமூக நலனுக்கு உதவுங்கள்.

எனவே இஸ்லாம் சகல துறைக்கும் வழிகாட்டுகின்றது என்று வாய் கிழியக் கூறிவிட்டால் போதாது. அதனைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் மார்க்க அறிஞர்களுக்கு உண்டு. ஆகவே மார்க்க அறிஞர்களை உருவாக்கும் மத்ரஸாக்களதுகல்வித்திட்டம்;நவீனயுகத்தின்சவால்களைபற்றிச்சலனமற்று இராமல் தங்களது மத்ரஸாக்களில்; சவால்களுக்கு முகம் கொடுப்போரை உருவாக்குவதன்மூலம்நிருபிக்கவேண்டியதுஅவசியமாகும்.

ஆடம்பர அலங்காரப் பொருட்களென தங்கத்தை சேமித்து வைப்பதை இஸ்லாம் தடை செய்து அது உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட வேண்டும்எனவற்புறுத்துவதுபுரியவில்லையா?

எங்கேவட்டிவீத்ததைகூட்டினால்உற்பத்திபாதிக்கப்பட்டுவிடுமோ என்றபயத்துடனும்குறைத்தால்வங்கியில்சேமிப்புநிதியம்குறைந்துவிடுமோ என்ற பயத்துடனும் கலங்கிக்கொண்டிருக்கம் பொருளாதார அமைப்புக்களுக்கு மத்தியில் இஸ்லாம் வட்டியை தடை செய்தது; ஏக இறைவனின்சட்டம்தான்நிலையானபொருளாதார அமைப்புக்குசாத்தியமான தீர்வுகளைவழங்கமுடியும்என்பதைஉணர்த்தவில்லையா?

ஆகவே இவற்றை அறியாதவர்களுக்கு புரிய வைக்க வேண்டிய கடமைஇஸ்லாமியசட்டத்தைஓதியுணர்ந்தஉலமாக்களின்கடமையல்லவா? ஆகவே அவர்களுக்கு அல்குர் ஆன் வழங்கும் அழகிய பொருளாதார திட்டம் போதிக்கப்படவேண்டாமா?

கம்யூனிசப் பொருளாதாரத்தையும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பையும் உலமாக்கள் தெரிந்த கொள்வதில்லை என்றோ அவர்களுக்கு அதுபற்றிபோதிக்கப்படுவதில்லைஎன்றோஇங்குநாம்குறைபடவில்லை.மாறாக இறை வேதத்தையும் இஸ்லாத்தையும் முழுமையாக புரிய வேண்டும் என்ற நோக்கில் மத்ரஸாவிற்கு கல்வி கற்க வந்த மாணவனுக்கு இஸ்லாத்தின் பொருளியல்திட்டங்கள்போதிக்கப்படாமைகுறையன்றோ?விமர்சனநோக்கில் மற்றய அமைப்புக்களை தெரிந்து வைத்திருப்பதும், போதிப்பதும் அவரவர் நோக்கத்தைப் பொருத்தது. ஆனால் இஸ்லாமிய பொருளாதாரத்தை இஸ்லாத்தின் வழிகாட்டியாக பயிற்றுவிக்கப்படும் உலமாக்களுக்கு திருப்திகரமான முறையில் போதிக்காமல் இருக்க முடியுமா?

இஸ்லாம்வெறும்வெற்றுடப்பாவல்ல.வெளியேதட்டித்தான்பூச்சாண்டி காட்ட வேண்டிய அவசியம் இஸ்லாத்திற்கு இல்லை. இஸ்லாம் 20ம் நூற்றாண்டுக்கும் 60ம் நூற்றாண்டுக்கும் ஏன் அழிவு காலம் வரைக்கும் வழி காட்டும். அல்லாஹ் அருளிய வேத நூலை தன்னகத்தே கொண்டுள்ள மார்க்கமாகும்.அப்படியிருக்ககாலத்துக்காலம்தோன்றும்ஒவ்வொருசவாலுக்கும் முகம் கொடுக்கும் மார்க்க அறிஞர்களை; அல்லாஹ்வின் வேதத்தையும் இறைதூதரின்போதனையையும்மையமாகக்கொண்டுஇயங்கும்மதரஸாக்கள் உருவாக்கவேண்டியதுகடமையல்லவா?புனிதநபியின்வாரிசுகளைஉருவாக்கி விடவேண்டியமத்ரஷாக்கள்சமூகஅரசியல்பொருளாதாரஅறிவுகள்எதுவுமின்றி அற்புத விளக்குகளுடன் ஆலிம்களை உருவாக்கி விடுகின்றனர். இவர்களால் கற்பனையில்தான்வாழமுடியுமேதவிரசமூகத்தில்வாழமுடியுமா?

நபியுல்லா அவர்கள் அரசியல் விற்பன்னராகத் திகழ்ந்தும் அவர்களின் வாரிசாகசான்றிதழ்பெற்றவர்களுக்குதற்காலஅரசியல்நிலைபற்றியஎதார்த்தப் பார்வைஇல்லைஎன்றால்வெட்கக்கேடில்லையா?பொருளாதாரப்பிரச்சினைக்குத் தீர்வு சொல்ல வழி தெரியவில்லையென்றால் பெருமானாரின் வாரிசுகளாக சான்றிதழ்பெற்றதன்பயன்என்ன?சமூகவாழ்கைபற்றியகருத்தோட்டம்இல்லை என்றால் இவரை எப்படி நபியின் வாரிசாக அங்கீகரிக்க முடியும்? இதை எல்லாம் மத்ரஸாக்களின்கல்வித்திட்டத்தை6ம்நூற்றாண்டில்இருந்துஅரைஅடிகூடநகர விடமாட்டோம்எனகங்கணம்கட்டியுள்ளவர்கள்சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

எதார்த்த உலகின் சவாலை எதிர் கொள்ள வேண்டிய உலமாக்களை உருவாக்க வேண்டிய பொறுப்பினை செயல்படுத்தும் மத்ரஸாக்கள் நன்கு திறம்படச் செயல்பட தவறியுள்ளதால் தான் இன்று உலமாக்களின்தரம்சமூகத்தில்குன்றியுள்ளதென்பதைமறக்கக்கூடாது.

வுளுசெய்யமறந்துதொழுதால்தொழுகைகூடுமா?கூடாதா?என்பது பற்றிஉலமாக்களிடம்கேட்கவருகின்றார்கள்.ஆனால்அரசியல்பிரச்சினை பற்றியோ வர்த்தக நடவடிக்கையின் செயல்பாட்டில் எழும் சந்தேகங்கள் பற்றியோ உலமாக்களை அதிகம் அணுகுவது இல்லை. ஏனெனில் உலமாக்களுக்கு தொழுகையைத் தவிர வேறு சில விடயங்களும் தெரியும் என்பது பற்றி பொது மக்களுக்குத் தெரிவதில்லை. இன்று இது தான் உலமாக்கள் பற்றிபொதுமக்கள் பெரும்பாலானோரின் அபிப்பிராயம். இதை நாம்மாற்றியமைக்கவேண்டாமா?

**வரலாறு**

உலமாக்கள் யார்? இந்த சமுதாயத்தை வழி நடத்தி செல்ல வேண்டியவர்கள் அவர்களுக்கு சமுதாயத்தை எப்படி வழி நடத்த வேண்டும் என்ற அரசியல் அறிவு வேண்டாமா? தனது நாட்டின் பின்னணி தெரிய வேண்டாமா?

மத்ரஸாக்களில் அரபு நாட்டின் வரலாற்றை 6ம் நூற்றாண்டுக்குள் முடித்துக் கொண்டவர்கள் சொந்த நாட்டின் வரலாற்றைக் கொஞ்சமேனும் சொல்லிக்கொடுப்பதுஉண்டா?இலங்கைமுஸ்லிம்களின்வரலாற்றுப்பின்னணி என்ன? அவர்களின் வளர்ச்சி. தியாகம் அவர்கள் ஆற்றிய தொண்டு அவர்கள் எதிர்கொண்டபிரச்சினைகள்,இன்றையசமுதாயப்பிரச்சினைகள்இப்படிதனது சொந்தநாட்டின்நிலையினையும்புரியவைக்கவேண்டாமா?இவற்றைப்பற்றி எந்த விதமான அறிவும் இல்லாமல் சமூக உணர்வு, சமூக நலனுக்காகக் குரல் கொடுக்கும் பக்குவம் அடிப்படை உரிமை உண்டென்ற உணர்வு போன்றவை தோன்றமுடியுமா?

உலகின் இன்றைய முஸ்லிம்களின் நிலை, முஸ்லிம் நாடுகளில் காணப்படும் ஆட்சிமுறை, இஸ்லாமிய நாடுகளில் உள்ள பிரச்சினைகளின் உண்மை நிலை பலஸ்தீனியர்களின் உண்மை நிலை போன்ற தற்கால இஸ்லாமியநாட்டுநடப்புகள்இஸ்லாமியநாடுகளில்அந்நியஆதிக்கம்இவை......

**வர்த்தகம்**

அடுத்து இலங்கையில் முஸ்லிம்களில் பெரும்பாலானோர் வர்த்தகர்களாகஇருந்தும்மத்ரஸாக்களில்உள்ளபாடத்திட்டத்தில்வர்த்தகப் பிரிவில்இஸ்லாத்தின்கொள்கைகள்தொகுத்தளிக்கப்படுகின்றதாஎன்றால் அதுவும்இல்லை.

**இஸ்லாம் வகுத்துள்ள தொழிலாளர் நலச்சட்டங்கள் சிலவற்றை பாருங்கள் உதாரணமாக:-**

"தொழிலாளியின் வியர்வை காய்வதற்கு முன்பாக அவனது கூலியினைக் கொடுத்து விடு"என்ற பெருமானாரின் நபி மொழியும் "நீர் அணிவதையே உனது வேலைக்காரர்களுக்கும் அணியச் செய்" நீர் உண்ணுவதையே உனது வேலைக்காரனுக்கும் உண்ணக் கொடு" என்ற போதனையும் தொழிலாளர்நலச்சட்டத்தின்அடிப்படையாகும்.வர்க்கப்போராட்டம்.என்ற பேச்சிற்குஇடமில்லாமல்செய்யும்தொழிலாளர்நலன்பேணும்சட்டங்களை கொண்டுள்ளஇஸ்லாமியதொழிலாளர்நலச்சட்டங்கள்நன்குவிளக்கப்பட வேண்டியதொன்றல்லவா?

ஏனெனில் இன்றைய யுகத்தில் கவர்ச்சியான முழக்கங்களால் கவர்ந்திழுக்கும்கம்னிஸ்ட்களுக்கும்தக்கபதில்அளிக்கவேண்டியபொறுப்புமார்க்க அறிஞர்களுக்கு உண்டு அதற்கு தக்கவாறு மார்க்க அறிஞர்களை உருவாக்க வேண்டியதுமத்ரஸாக்களன்றோ?

மேலும் இஸ்லாம், வர்த்தகப் பிரிவில் நவீன கருத்துக்களுக்கு அடிப்படையாக அன்றே திகழ்ந்துள்ளது என்பது வெளிப்படை. இன்று கூட Chequeஎன்று அழைக்கப்படும் காசோலை; ஷீக் என்ற அரபுச் சொல்லின் வடிவமாகும்என்பதை நினைவுகொள்ளவேண்டும்.

மேலும் வர்த்தக ஒப்பந்த சட்டம், ஈட்டுச்சட்டம், விற்பனைச்சட்டம், விற்பனைத்திரும்பல்சட்டம்,எழுத்துமூலவாக்குறுதிச்சட்டம்,கொடுப்பனவுச்சட்டம், வாடகைச்சட்டம் போன்ற அத்தனையையும் இஸ்லாம் தெளிவாக இயம்பியுள்ள வர்த்தகசட்டங்களாகும்.இவைமேலும்நவீனமுறையில்யுகத்தின்தேவைக்கேற்ப நன்குஒழுங்குபடுத்தப்பட்டுஇஸ்லாமியவர்த்தகம்எனஒருபாடமாகபோதிக்கப்பட வேண்டியதுஇன்றையகாலகட்டத்தில்அத்தியாவசியத்தேவையாகும்.

**அரசியல் :**

அரசியலைப் பொறுத்தவரை மார்க்க கல்விக் கூடங்கள் அக்கறை காட்டுவதேயில்லை.அரசியல்மார்க்கத்திற்கு அப்பால்பட்டதுஎன்றுகருத்தும்சில இடங்களில்நிலவுகிறது.இஸ்லாம்........

... வகுத்தளித்துள்ள அரசியல் யாப்பு; ஏக இறைவனால் இயற்றப்பட்ட சட்டங்களைநாட்டில்நடைமுறைப்படுத்துவதாகும்.அரசியல்தலைவன்என்பவன் இறைவனின் சட்டத்தை நிலை நாட்ட பாடுபடும் அரசியல்வாதியாகும் என்பதே இஸ்லாத்தின் கொள்கையாகும். எனவே சமுதாயத்தை வழி நடத்திச் செல்ல வேண்டிய ஆலிம் அரசியல்பற்றிய தெளிவான கருத்துக்களை குர்ஆன் ஹதிஸின் அடிப்படையில் இருந்து தெரிந்திருக்க வேண்டியது இன்றைய காலகட்டத்தில் அவசியமாகும்.

பெருமானார் ஸல் தாங்கள் சிறுபான்மையாக இருந்த போது ஏக இறைவனுக்கு இணை வைப்போருடனும் ஒப்பந்தம் செய்து கொண்டு தங்களுக்கு எதிராகப் போர் தொடுத்த குறைசிகளை எதிர் கொண்டமை இங்கு கவனிக்கத்தக்கதாகும்.இவைபற்றியும்ஒருசஹாபிதன்னைக்கவர்னராகநியமிக்க வேண்டும் என்று கேட்ட பொழுது அதனை விரும்புவர்களுக்கு அல்ல. தகுதியானவர்களுக்கேவழங்கப்படவேண்டும்என்றுசிலவரைவிலக்கணங்களை அரசியலில் வகுத்துள்ளமையும் இஸ்லாமிய அரசியல் அமைப்பின் சில அம்சங்களாகும்.எனவேஇவைபற்றிமுழுமையானஆய்வுகள்மேற்கொள்ளப்பட்டு இஸ்லாமிய அரசியல் அமைப்பை எப்படிச் செயற்படுத்துவது இஸ்லாமிய சமுதாயத்தை எப்படி வழிநடத்துவது என்பது பற்றியெல்லாம் தெளிவான

விளக்கங்களைக்கொடுக்கின்றஇடமாகமார்க்ககல்விகூடங்கள்திகழும்வரை சமுதாயத்தைவழிநடத்திச்செல்வதென்பதுபகற்கனவாகவேமுடியுமென்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.இனிமேலாவதுமார்க்ககல்விகூடங்கள்நவீன யுகத்தின் தேவைக்கேற்ப உலமாக்களை உருவாக்கி சமுதாயத்திற்கு வழி காட்டும்அரசியல்தலைவர்களைஉருவாக்கவேண்டியதுஅவசியமாகும்.

இன்றைய நெருக்கடியான நிலையில் இஸ்லாமிய ராஜ தந்திர நுணுக்கங்களை பயன்படுத்தி எப்படி எமது அரசியல் இஸ்திரத்தன்மையை, எமது உரிமையை வென்றெடுக்க முடியும் என்ற கருத்தினை மார்க்க கல்வி கூடங்கள்உருவாக்கத்தவறியதன்விளைவேஇன்றுமுஸ்லிம்களைபிளவுபட்டு வாழ்கின்றநிலைக்குத்தள்ளிவிட்டதுஎன்பதுகுறிப்பிடத்தக்கதாகும்.

ஆலிம்கள்அரசியல்தலைவர்களாகதிகழவேண்டும்என்பதுஅவர்கள் அரசியல்வாதியாக திகழ வேண்டும் என்பதல்ல. அரசியல்வாதிகளுக்கு அறிவுரை வழங்கி இஸ்லாமியப் அடிப்படையில் அவர்களை வழி நடத்தினாலேயே போதுமானதாகும். ஒவ்வொரு ஊரிலும் உள்ள ஆலிம்கள் தத்தமதுஊரில்உள்ளதலைவர்களாகத்திகழவேண்டும்.அவர்கள்வழிநடத்தும் முதிர்ச்சிபெற்றவர்களாகவும்திகழவேண்டும்.அம்முதிர்ச்சியைமார்க்ககல்வி கூடங்கள்அவர்களுக்குஅளிக்கும்கல்விமூலமேவழங்கமுடியும்.

**சட்டம்:**

சட்டத்தைப் பொறுத்தவரையில் இஸ்லாம் குற்றவியல் சட்டம்,உரிமையியல் சட்டம், மார்க்க அனுஷ்டான சட்டம், தொழிலாளர் நலச்சட்டம், வர்த்தக சட்டம், தீங்கியற் சட்டம், வாரிசுரிமைச் சட்டம் விவாகச் சட்டம் இப்படிச் சட்டங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இச்சட்டங்கள் தனித்தனி கோர்வையாக ஆக்கப்பட்டு இஸ்லாமிய சட்டங்கள் என போதிக்கப் படுமாயின் சட்டக் கல்லூரியில் பயிற்றப்படுபவர்கள் போன்று வெளியேறலாம். ஆனால் இவை நன்கு கோவைப்படுத்தப்பட்டுபிரிவுவகைப்படுத்தப்படாமல்வெறும்விவரணக்கட்டுரை போன்றுபடித்துக்கொடுக்கப்படுவதாலும்பழமைவாய்ந்தநூல்களேபடித்துக் கொடுக்கப்படுவதாலும் புதிய மார்க்கத் தீர்ப்பு நவீனகாலப் பிரச்சினைகளில் இஸ்லாம் காட்டும் சட்டத் தீர்ப்புகள் பற்றிய அறிவு உலமாக்களுக்குக் கிடைப்பதில்லை.இதனால்குகைவாசிகள்போன்றுவெளியேவந்ததும்திண்டாட வேண்டிய நிலை உலமாக்களுக்கு ஏற்படுகின்றது. இது கவனிக்கத்தக்க அம்சமாகும். ஆகவே, இன்றைய அவசியத் தேவையாக இஸ்லாமியச் சட்டக் கோவையொன்று வகைப்படுத்தப்பட்டு சட்ட விடயம், தீர்ப்பு நியாயம் என்பன தெளிவாகப்போதிக்கப்படவேண்டியதுஅவசியமாகும்.

## உளவியல்

மார்க்க கல்விக் கூடங்கள் நபிகளாரின் வாரிசுகளை உருவாக்கும் புனிதப் பணியை மேற்கொள்ளும் நிறுவனங்களாகும். ஆகவே அங்கிருந்து வெளியேறுபவர்கள் சமூகக் கண்ணோட்டம் உள்ளவர்களாக மனித இயல்புகளை நன்கு உணர்ந்தவர்களாக அமைய வேண்டும். ஏனெனில் பெருமானாரின் போதனைகளை மக்களுக்கு எடுத்தியம்ப வேண்டிய பொறுப்புள்ளவர்கள் உலமாக்கள். ஆகவே போதனைகளை மேற்கொள்கின்ற போது எப்படி நடந்துகொள்ள வேண்டும். தனிமனித உளஇயல்புக்கு ஏற்பஎப்படித் திட்டமிட்டு செயல்பட வேண்டும் என்பது பற்றிய உளவியல் நுணுக்கங்களை அறிந்தவர்களாக உலமாக்கள் திகழ வேண்டும்."

பெருமானாரின் ஹதீஸ்களை நன்கு ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் உளவியல் ரீதியாகவே தங்களது போதனைகளை அளித்துள்ளமை நன்கு விளங்கும். ஒரு சம்பவத்தைப் பாருங்கள். அப்துல்லாஹ் இப்னு உம்மிமக்தும் ரலி அவர்கள் ஒரு அந்தகர் அவர்கள் பெருமானாரிடம் வந்து யாரசூலல்லாஹ்! நான் பார்வை இல்லாதவன் அப்படி இருந்தும் பள்ளிவாயலுக்கு வந்து ஜமா ஆத்தாகத்தான் தொழ வேண்டுமா? எனக்கு ஏதும் சலுகைகள் இல்லையா? என வினாவினார். அந்த ஸஹாபி தனக்கு சலுகை கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் தான் இதனைக் கேட்கின்றார்கள். உடனே நீங்களும் பள்ளிக்கு வந்தாகத்தான் வேண்டும் என்று கூறி அந்த மனிதரின் எதிர்பார்ப்பை நிராகரித்து அவரை சோர்வடையச் செய்ய பெருமானார் (ஸல்) விரும்பவில்லை. மாறாக நீங்கள் ஜமாத்தாக தொழத் தேவையில்லை என்று கூறி அனுப்பி விட்டு அவர்கள் சிறிது தூரம் சென்ற பின் அவரை திருப்பி அழைக்கிறார்கள். பெருமானார் அவர்கள் மீண்டும் திரும்ப அழைக்கும் பொழுது நிச்சயமாக அந்த ஸஹாபியின் மனதில் பெருமானார் (ஸல்) மாற்றாக ஏதோ சொல்லப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு உருவாகிஇருக்குமல்லவா? ஆம். அந் துதிர்பார்ப்புடன் அவர்கள் திரும்புகின்ற பொழுது பாங்கு ஒலி உங்களுக்கு கேட்கின்றதா? எனக் கேட்கிறார்கள் பெருமானார் ஆம் என்று கூறுகிறார். அந்த ஸஹாபி உடனே பெருமானார்(ஸல்) அவர்கள் அப்படியானால் நீங்கள் ஜமாத்துடன் சேர்ந்து தான் தொழ வேண்டும் என்று கூறுகிறார்கள். இப்பொழுது சலுகை தேடி வந்த சஹாபிக்கு உளரீதியான பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லாமல் அவரது எதிர்பார்ப்பு மாற்றியமைக்கப்பட்டு அவருக்கு எவ்வளவு நுணுக்கமாகப் பெருமானார் போதனை செய்துள்ளார்கள் என்பதைப் பாருங்கள். இப்படி உளவியல் ரீதியாகப் பெருமானார் அணுகிய சம்பவங்கள் ஹதீஸ்களில் பரவிக் கிடக்கின்றது. அவற்றை ஒவ்வொன்றாக விபரிப்பது இச்சிறிய பேச்சினில் சாத்தியமாகாது.

ஆகவே பெருமானாரின் போதனைகளை மக்களுக்கு எத்திவைக்கும் உலமாக்கள் நன்கு திறம்பட செயல்பட வேண்டிய அளவுக்கு உளவியல் ரீதியான நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஆகவே மார்க்க கல்வி கூடங்கள் பெருமானாரின் ஹதிஸ்களை சொல்லிக் கொடுக்கும் அமைப்போடு நின்று விடாமல் ஒவ்வொரு ஹதிஸிலும் பொதிந்துள்ள சமூக அரசியல் பொருளாதார உளவியல் ரீதியான கருத்துக்களை தெளிவுபடுத்தி சமுதாயத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய போதகர்களாக உலமாக்களை உருவாக்க வேண்டியது அவசியமாகும்.

உளவியல் பற்றி இஸ்லாம் ஆணித்தரமான சில கருத்துக்களை முன் வைக்கிறது. ஆனால் இது பற்றிய ஆய்வுகள் மார்க்க கல்வி கூடங்களில் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதுடன் உளவியல் இஸ்லாத்திற்கு முரணானது என்ற கருத்தும் சில இடங்களில் நிலவுகிறது.

செயல்கள் யாவும் எண்ணங்களின் விளைவே என்றும் உடலில் ஒரு மாமிசப்பிண்டம் உள்ளது. அது திருந்தினால் உடல் முழுவதும் திருந்திவிடும். அது கெட்டுவிட்டால் உடல் முழுவதும் கெட்டுவிடும் என்ற ஹதிசும் உளவியல் ஆய்வுக்கு ஆணித்தரமான ஆதாரங்களாகும்.

**சமூகவியல் :**

சமூகவியலைப் பொறுத்தவரை எப்படி மக்களுடன் பழக வேண்டும், நாகரீகமாக நடந்து கொள்வது எப்படி, எப்படிப் பேச வேண்டும் என்பது பற்றிய அறிவினை மார்க்க கல்வி கூடங்கள் அறிமுகப்படுத்த வேண்டும். ஏனெனில் இஸ்லாம் எதையும் விட்டு வைக்கவில்லை. குடும்ப உறவுமுறை, அயல் வீட்டு உறவு முறை, அந்நிய மதத்தாருடன் நடந்து கொள்ளும் முறை, சகோதரர்களுடன் நடந்து கொள்ளும் முறை, மக்களுடன் நடந்து கொள்ளும் முறை, சிரிப்பது, அழுவது, நடப்பது முதல் சிறுநீர் கழிப்பது வரைக்கும் சில நடைமுறை நாகரீகங்களை விளக்கி சமூக வாழ்வியலை தெளிவுபடுத்தாமல் இல்லை. ஆகவே சமூக வாழ்க்கையிலும் தனி மனித வாழ்க்கையிலும் மனிதர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகின்றதோ அவற்றைச் சமூகவியலாகத் தொகுத்து பாடநூலாக மார்க்க கல்விக் கூட மாணவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டியது இக்காலகட்டத் தேவைகளில் ஒன்றாகும். ஏனெனில் மனிதர்களோடு சேர்ந்து வாழும் கலை வாழ்க்கையில் அரைவாசியாகும் என்ற பெருமானார் (ஸல்) அவர்களின் பொன்மொழி இதனை வலியுறுத்துகின்றதல்லவா?

இரண்டு பேர் பேசிக் கொண்டிருக்கும் போது இடையில் குறுக்கிடுவதாயின் மன்னிக்க வேண்டும் என்று கூறி அணுகும் முறை ஆங்கிலேய நாகரீகம் என்று நாங்கள் நினைக்கின்றோம். ஆனால் உண்மையில் அது இஸ்லாமிய நாகரீகமாகும். உதாரணமாக இரண்டு பேர் பேசிக்கொண்டிருக்கும்போது அவர்களின் அனுமதியின்றி குறுக்கிடாதீர் என்ற பெருமனாரின் ஹதீஸ் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

இப்படி இன்றும் ஆங்கிலேயரின் நாகரீகம் என்று நாம் கருதும் அநேக நாகரீகங்கள் இஸ்லாமிய நாகரீகத்தினையே அடிப்படையாகக் கொண்டதாகும். அவற்றினை ஒவ்வொன்றாக இங்கே விபரிப்பது நமது நோக்கமல்ல. ஆனால் அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதுதான் முக்கியமானதாகும். வந்தனம் கூறுவது, வரவேற்பது, பேசுவது, பழகுவது போன்ற அத்தனை சமூக வாழ்க்கை நாகரீகங்களும் மார்க்க கல்விக் கூடங்களில் நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

இன்றேல் உலமாக்கள் நாகரீகம் அறியாதவர்கள், இங்கிதமில்லாதவர்கள் என்று எள்ளி நகையாடப்படும் நிலைக்காளாக வேண்டி வரும் என்பதை மறந்துவிடக்கூடாது. நாகரீகத்தையே உலகுக்கு போதித்த இஸ்லாமிய மார்க்க கல்விக் கூடங்களில் இருந்து இஸ்லாமிய நாகரீகப் பண்புகளை அறியாதவர்களாக வெளிவருவது மிகவும் கவலைக்குரிய அம்சமாகும். எனவே இன்றைய மார்க்க கல்விக் கூடங்களில் சீரமைக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

1.முதலில் மாணவர்களைத் தாய்மொழியில் சிறந்த தேர்ச்சி பெற்றவர்களாக ஆக்க முயற்சிக்க வேண்டும்.

ஏனெனில் தாய்மொழியில் ஆற்றல் இல்லாதவரை எந்தக் கருத்தினையும் புரியவும் முடியாது வெளிப்படுத்தவும் முடியாது. மேலும் தாய்மொழியே புரியாது போனால் இன்னொரு மொழியையும் அதன் இலக்கணத்தையும் இலக்கியத்தையும் மனப்பாடம் செய்யத்தான் முடியுமே தவிர புரிந்து கொள்ள முடியாது. அதனால்தான் இன்று மார்க்க கல்விக் கூடங்களிலிருந்து வெளியேறும் பலர் அரபு நூல்களைப் படித்துப் புரிந்து கொள்ள முடியாமல் திண்டாடுவதைக் காண முடிகின்றது.

பொதுவாக இலக்கணம் என்பது எல்லா மொழிகளுக்கும் உண்டு. அவற்றிடையே தொடர்பும் உண்டு. ஆகவே சுமாரான தாய்மொழி இலக்கண அறிவும் தாய்மொழியைக் கிரகிக்கும் ஆற்றலும் இன்னொரு மொழியை இலகுவில் கிரகிக்க வழிகாட்டும் என்பதால் அது பற்றிய .........அக்கறை அரபு மத்ரஸாக்களில் எடுக்கப்பட

வேண்டும். மொழி ஓர் ஊடகமே தவிர கருப்பொருள் அல்ல என்பதனை மத்ரஸாக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இது இரண்டாவது அம்சமாகும். எனவேஅரபுமொழியில்கிடைக்கும்நூல்களைக்கொண்டுதான்மார்க்ககல்வி புகட்டவேண்டுமென்றகருத்திலிருந்துமத்ரஸாக்கள்விடுபடவேண்டும்.

அல்குர்ஆனையும்ஹதீஸையும்விளங்கிக்கொள்வதற்குஅரபுமொழி அவசியமென்பதால் முதல்மொழியாக அரபினை நன்கு திட்டமிட்டு நவீனமுறையில்அரபுமொழியினைக்கற்பிக்கும்பாடநூல்களைஅறிமுகப்படுத்த வேண்டும்.ஆறுமாதங்களில்ஆங்கிலமொழியைப்படிக்கமுடியுமாகஇருந்தால் எட்டு ஆண்டுகள் அரபி மொழி படித்துக் கொடுக்கப்பட்டும் அந்த மொழியில் நூல்களை உருவாக்கவோ படித்துணரவோ ஏன் பேசவோ முடியாதவர்களாக உலமாக்கள் வெளியேறுகின்றார்கள் என்றால் அரபு மொழியைப் போதிக்கும் மார்க்ககல்விக்கூடங்களின்நிலையைஎப்படிவர்ணிப்பது?ஆங்கிலமொழியைப் படித்து ஆங்கில நூல்களை உருவாக்குகின்றார்கள் ஆங்கிலப் பாடசாலை மாணவர்கள்.ஆனால்எட்டுஆண்டுகள்அரபுமொழியைக்கற்றும்ஓர்அரபுநூலை எழுதுவதற்கு உலமாக்கள் திண்டாடுகின்றனர். இந்த நிலை மாற வேண்டாமா? எங்கே குறை உள்ளது? இதுபற்றி சிந்தித்துச்செயற்பட வேண்டாமா? அரபுக் கலாசாலைகளில்சமகாலஇலக்கியங்கள்தற்காலப்பேச்சுவழக்குப்பற்றிஎதுவும் போதிக்கப்படுவதில்லை. மேலும் இலகுபடுத்தப்பட்ட அமைப்பில் அரபு இலக்கணமும் மொழியும் போதிக்கப்படுவதில்லை. மாறாகச் சேக்ஸ்பியரின் நூலைக்கொண்டுஆங்கிலம்கற்பித்தால்என்னநிலைஆகுமோஅதேநிலைதான் இங்கு அரபுக் கலாசாலைகளில் அரபு கற்பிக்கும் நிலையாகும். எனவே அரபு மொழியை மிக இலகுவில் படித்துக் கொள்ள தற்போது எத்தனையோ புதுப்புது நூல்கள் உருவாகியுள்ள நிலையில் அவற்றினை மத்ரஸாப் பாடத்திட்டத்தில் சேர்ப்பது மிகவும் அவசியமானதொன்றாகும். மேலும் அரபு மூலத்தில் புதிய நூல்களை தேவைக்கேற்ப உலமாக்கள் உருவாக்க வேண்டும். அப்படி அரபு மூலத்தில் உருவாக்குவது சிரமமெனில் அரபுநூல்களை இஸ்லாமிய அரபு நாடுகளிலிருந்துபெற முயற்சிக்க வேண்டும். அப்படியும் தற்காலப் பிரச்சினை களைஎதிர்கொள்ளும்நூல்கள்கிடைப்பதுஅரிதுஎனில்தாய்மொழியில்அல்லது ஆங்கிலமொழியில்கிடைக்கும்தரமானநூல்களைபாடத்திட்டத்தில்சேர்த்துக் கொள்ளவேண்டும்.

எமக்கு கருத்தே முக்கியமல்லாது மொழி முக்கியமல்ல. இதனைக் கருத்தில்கொண்டுசாத்தியமானவழிகளைக்கையாள்வதன்மூலம்மார்க்கக்கல்வி பயிலும்மாணவர்களைத்தரமுயர்த்தவேண்டும்.

மூன்றாவதாக இன்னுமொரு அம்சத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு காலத்தில் இஸ்லாமிய மார்க்க அறிஞர்களாகத் திகழ்ந்தவர்கள் சட்டம்,

கணிதம், விஞ்ஞானம், புவியியல், தத்துவம், வைத்தியம் போன்றவற்றிலும் தேர்ச்சி பெற்றவர்களாகவே இருந்து வந்துள்ளனர். இதனை இமாம்களினதும், இஸ்லாமியப்பெரியார்களெனபோற்றப்படுவோர்களினதும்சரித்திரத்தைஆய்வு செய்கின்றபோதுபுரியமுடியும்.எனவேமார்க்ககல்விக்கூடங்களில்இஸ்லாமிய அடிப்படையில் இதைப் போதிப்பதில் எந்தத் தப்பும் இல்லை என்பதை மார்க்க கல்விக் கூடங்கள் உணர்ந்து செயற்பட வேண்டியது அவசியமாகும். பெருமானாரின்வைத்தியக்குறிப்புகள்இங்ககவனிக்கத்தக்கது.

மனித இனத்திற்கு பயன்படும் யாவும் மார்க்க கல்வியே தான் என்பதை உணர்ந்து மார்க்க கல்விக் கூடங்கள் செயற்படாதவரை எழுச்சி மிக்கதோர் உலமாக்களின் தலைமைத்துவத்தை நாட்டில் ஏற்படுத்த முடியாதென்பதை மறந்து விடக் கூடாது. விஞ்ஞானத்திற்கு வித்திட்டது இஸ்லாம் என்றால் ஏன் இன்று விஞ்ஞானம் பற்றிய எந்தவொரு அறிவும் மார்க்கக் கல்விக் கூடங்களில் போதிக்கப்படுவதில்லை. மார்க்ககல்விக் கூடங்களில் இவற்றையெல்லாம் புகுத்தினால் மார்க்கக் கல்வி பாதிக்கப்பட்டுவிடும்என்றுகல்வியைக்கூறுபோடுகின்றார்கள்.

இத்தப்பான அபிப்பிராயத்தை கலைத்துவிட்டு மத்ரஸாக்கள் முழுமையான நிறைவான கல்வித்திட்டத்தை மாணவர்களுக்கு வழங்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு முழுமையான கல்வித்திட்டம் மத்ரஸாக்களில் புகுத்தப்படுமாயின் நிச்சயமாக மார்க்க கல்வி பயில்வதில் முஸ்லிம்கள்அதிகஆர்வம்காட்டுவார்கள்என்பதில்ஐயமில்லை.

இன்றைய கல்வித்திட்டம் முழுமையானதாக இல்லா-மலிருப்பதாலேயே மார்க்கக் கல்விக்காகத் தங்களது குழந்தைகளைப் பெற்றோர்மத்ரஸாக்களுக்குஅனுப்பத்தயக்கம்காட்டுகின்றார்கள்என்பதில் எந்தவிதமானசந்தேகமுமில்லை.கல்விச்சீர்திருத்தத்தைபுறக்கணித்துவிட்டு முஸ்லிம்கள் மார்க்கக் கல்வியில் ஆர்வம் காட்டுவதில்லையென குறைகூறுவதில்எந்தவிதமானஅர்த்தமுமில்லை.

மார்க்கக்கல்விக்கூடங்களிலிருந்துவெளியாகும்உலமாக்களின் பரிதாப நிலையைக் கண்ணுறும் முஸ்லிம் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை மார்க்க கல்வி பயில எப்படி அனுப்பத் துணிவார்கள்?

நிச்சயமாக எனது குழந்தையை மார்க்க கல்வி பயில மத்ரஸாவுக்கு அனுப்பவே மாட்டேன் என உலமாக்களே கூற நான் கேட்டிருக்கிறேன் என்றால் பொதுமக்களின்நிலையை எப்படி விபரிப்பது? ஆகவே மார்க்க கல்விக் கூடங்கள்

தற்காலத்தேவைகளைகருத்திற்கொண்டுபரந்துபட்டஅறிவுஜீவிகளைஉருவாக்க வேண்டியதுஅவசியமாகும்.

நான்காவதுமார்க்ககல்விக்கூடங்களில்சகலதுறைகளிலும்தரமான நூல்களைக் கொண்ட நூலகம் இயங்க வேண்டும். அரபுக் கலாசாலை என்றால் அரபு நூல்கள் மட்டும் தான் இருக்கவேண்டுமென்ற பழமையினை நீக்கி தரமான நூல்களைக் கொண்ட நூலகத்தை உருவாக்கி மாணவர்கள் தத்தமதுவிருப்பத்திற்கேற்பதங்களது அறிவனைவிருத்திசெய்துகொள்ளும் வாய்ப்பினைஏற்படுத்தவேண்டியதும்அவசியமாகும்.

நாளாந்தபத்திரிகைபடிப்பதும்குற்றமெனக்கருதும்மத்ரஸாக்களும் நமது நாட்டில் இல்லாமல் இல்லை என்பதனை நினைத்துப் பார்க்கும் போது இவர்கள்யாருக்காகஉருவாக்கப்படுகிறார்கள்என்றசந்தேகம்எழாமலிருக்க வாய்ப்பில்லை. நாளாந்த உலக நடப்புகளை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கூட தடைசெய்யப்படும் போது அவை பற்றிய அபிப்பிராயங்கள் எப்படி உருவாகமுடியும்என்பதைநாம்சிந்தித்துப்பார்க்கவேண்டும். ஒருசமூகத்தை வழிநடத்தவேண்டியபொறுப்புள்ள ஆலிமுக்கு: சமுகத்தின்பிரச்சினைகளை அறிய முடியாமற் செய்தால் அவரால் அப்பிரச்சினையை எப்படி இனங்கண்டு தீர்வு காண முடியும் என்பதனையும் சற்று நிதானமாக உண்மையைச் சிந்தித்துணரும்பக்குவத்துடன்அணுகிப்பாருங்கள்.

இலங்கையில் மத்ரசாக்கள் உருவாகி ஒரு நூற்றாண்டைத் தொட்ட மத்ரசாக்களும் உண்டு. அப்படியிருந்தும் இன்று வரை மார்க்கக் கல்வியின் உயர் படிப்பு என்ற அடிப்படையில் தற்காலப் பிரச்சினைகள் பற்றி மேலதிக ஆய்வுகள் செய்வதற்கான உயர்கல்வி வசதிகளும் வாய்ப்புக்களும் உருவாக்கப் பட்டிருக்கின்றனவாஎன்றால்இல்லைஎன்பதைவருத்தத்துடன்ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். முதலில்பாடத்திட்டம்ஆரம்ப, நடுத்தர, உயர்தர வகுப்புக்களைக் கொண்டதாகஉருவாக்கப்பட்டுப்போதிக்கப்படவேண்டும்.

உயர்தர நிலையில் கட்டாயப் பாடங்களுடன் தத்தமது விருப்பத்திற்கிணங்கவும்திறனுக்கேற்பவும்குறிப்பிட்டபாடங்களில்முழுமையான திறனை வெளிப்படுத்தும் வகையில் பாடத்திட்டம் வகுக்கப்படல் வேண்டும். இந்த நடைமுறை (இமாம் புகாரி ரஹ்) அவர்கள் காலத்தில் கூட இருந்துள்ளதென்பதை சரித்திரவாயிலாகஅறிகின்றோம். ஏனெனில்இமாம்புகாரிஅவர்கள்மார்க்கச்சட்டக் கலையைப் பயில முன்வந்தபோது ஹதீஸ்கலை சிறந்ததென ஆலோசனை வழங்கப்பட்டமையும், பின்பு ஹதீஸ்கலையைத் திரட்டிய இமாம்களில் முதலாம்

இடத்தை அவர்கள் பெற்றார்கள் என்பதும் நாம் அறியாததல்ல. ஆகவே உயர் வகுப்பில்அவரவர்திறனுக்கேற்பதங்களதுசெயற்திறனைவெளிப்படுத்தும்வாய்ப்பு மாணவர்களுக்குவழங்கப்படவேண்டும்.

மேலும் உயர்கல்வியில் சமகாலப் பிரச்சினைகள், சமகால இலக்கியங்கள்பற்றிய ஆய்வினைமேற்கொள்ளவும், அரபுலகின்பரந்துபட்ட வரலாறுஇஸ்லாத்தின்எழுச்சியிலிருந்துஇற்றைவரைஇஸ்லாமியசரித்திரம் போன்றவற்றைப் பற்றிய அரசியலாய்வுகள், விஞ்ஞான யுகம் தோற்றுவித்துள்ள பிரச்சினை பற்றிய ஆய்வுகள், இஸ்லாம் எப்படி இவற்றை அணுகுகின்றது என்பது போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளவும் வசதியாக அரபுக் கல்லூரிகள் உயர் கல்வி ஆராய்ச்சி நிலையங்களை உருவாக்கி மாணவர்களின் சிந்தனை ஆற்றலைத் தூண்டுவதோடு சமகாலப் பிரச்சனைகளை அணுகும் பக்குவத்தினையும் அவர்களுக்கு வழங்க வேண்டியதுஅவசியமாகும்.

ஐந்தாவதாக மார்க்க கல்விக் கூடங்களிலுள்ள பரீட்சை முறைகளை மீளாய்வுசெய்யவேண்டும்.அனேகமானஅரபுக்கல்லூரிகளில்மனப்பாடம்செய்து எழுதவேண்டியகேள்விகளேகேட்கப்படுகின்றன.உதாரணமாகதொழுகையைப் பற்றி ஆசிரியர் விபரிப்பதை எழுதுக? இள்மு பாயிலைப் பற்றி விரிவாக எழுதுக? தப்சீரின் முகவுரையை எழுதுக? என்று தான் உயர் வகுப்புக்களிலும் கேள்விகள் கேட்கப்படுகின்றன. மாணவர்களும் மனனம் செய்து அப்படியே ஒப்புவித்து சித்தியடைந்துவிடுகிறார்கள்.அவர்களுக்குப்புரிந்ததா,புரியவில்லையாஎன்பது பிரச்சினையல்ல. மாறாக பாடமாக்க முடிந்ததா, முடியவில்லையா என்பது தான் பிரச்சினை. புரிந்தும் மனனம் செய்ய முடியாமற் போனவனை விடப் புரியாமல் மனனம் செய்தவன் அதிக புள்ளிகள் பெற்றுத் தேறும் துர்ப்பாக்கிய நிகழ்வுகள் மத்ரஸாக்களில் இன்றும் நிகழ்கின்றன. ஆகவே ஆரம்ப வகுப்புகளில் வேண்டுமானால் இவ்வாறான கேள்விகள் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் உயர் வகுப்புகளில் மாணவர்களின் திறமையை எடைபோடுகின்ற வகையில் கேள்விகள் அமைய வேண்டாமா? எனவே மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் பரீட்சைகளும் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தியமைக்கப்படவேண்டும்.

ஆறாவதாக மத்ரஸாக்களில் வெறுமனே கிளிப்பிள்ளைப் பாடம் சொல்லிக் கொடுப்பது தவிர்க்கப்பட்டு சிந்தனையைத் தூண்டும் விடயம் ஆராயப்படுவதுடன்மாணவர்களின்சிந்தனையைத்தூண்டும்பிரச்சினைகளை அவர்கள் முன்வைத்து அவர்களது அபிப்பிராயங்களை கூறுமாறு வற்புறுத்த வேண்டும். வாசிப்பதோடும் படிப்பதோடும் சிந்திப்பதற்குரிய நிறைய

விடயங்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும். அல்குர்ஆனில்படியுங்கள்என்றுசிலதடவைகள்தான்கூறப்பட்டுள்ளது.மாறாக சிந்திக்கவேண்டாமா?சிந்திக்கவேண்டியவர்களுக்குஎவ்வளவோவிடயங்கள் இதில் உண்டு என்ற அல்குர்ஆன் பலமுறை வலியுறுத்துவதை இவ்விடத்தில் நினைவில்வைத்துக்கொள்வதுஅவசியமாகும்.

ஏழாவதாக மார்க்க கல்வி பயிலும் மாணவர்களை நபிமார்களின் புனிதமானபணியினைமேற்கொள்ளவேண்டியவர்கள்என்றகருத்தைஊட்டி உருவாக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு உருவாக்கப்படுவார்களேயானால்எங்களதுபொருளாதாரநிலைமோசமாக உள்ளதனால்எங்களதுகொள்கைக்குமுரணானதையும்எதிர்க்கமுடியாமல் மௌனமாகிவிடுகிறோம்என்றுபுலம்பும்உலமாக்கள்தோன்றமாட்டார்கள் என்று உறுதியாக நம்பலாம். ஏனெனில் சத்தியத்தை நிலை நாட்டுவதில் எல்லாஉலமாக்களும்உறுதியாகஇருந்தால்ஜமாஅத்தார்உலமாக்களின் வழிக்கு வந்து தானே தீர வேண்டும். மாறாக ஒரு சில உலமாக்கள் அவர்களுக்கு மௌனம்சாதிப்பதனால்தானேதங்களதுமுட்டாள்தனமான பிடிவாதத்தில்உறுதியாகநிலைக்கின்றார்கள்என்பதையும்இவ்விடத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். எட்டாண்டுகள் முழுநேரப் பயிற்சி வழங்கும் கல்லூரிகள், அரபு மத்ரஸாக்கள் சாதிப்பது சொற்பமே. எனவே இதனை மனதில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் நன்கு சிந்தித்து முழுமையான பாடத்திட்டத்தினை உருவாக்கி நாட்டினதும், யுகத்தினதும் இன்றைய தேவைகளை நிறைவு செய்யவும்; பிரச்சினைகளை எதிர்கொள்ளவும் தகுதிவாய்ந்த உலமாக்களை உருவாக்கப் பாடுபடுவார்களேயானால் சமூக மறுமலர்ச்சியும், இஸ்லாமிய சமூக அமைப்பில் எழுச்சியும் மீண்டும் பூத்துக் குலுங்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே இவ்அரிய பணியினை நன்கு சிந்தித்து ஆக்கபூர்வமானபணியில்ஈடுபடவேற்றுமைகளைந்துகருத்தொருமித்துச் செயற்படஅல்லாஹ்நம்அனைவருக்கும்அருள்புரிவானாக.

ஆமின்யாரப்பல்ஆலமீன்.

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரிடமிருந்து உலமா காங்கிரஸின் 2வது மாநாட்டிற்கான அழைப்பு!

## 18 பெப்ரவரி 1990

எனது பேரன்பு மிக்க உலமாப் பெருமக்களே!

*"அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு"*

இஸ்லாமிய அடிப்படையிலான முஸ்லிம் சமூக அமைப்பொன்றை கட்டியெழுப்பும் பணியில் முன்னணி வகிக்க வேண்டியவர்கள் நீங்கள். தனிநபர்களாக இஸ்லாமிய தூது பற்றிப் பேசும் பேச்சாளர்கள் என்ற வட்டத்திலிருந்து விலகி செயலில் இறங்குபவர்களாக நீங்கள் மாற வேண்டும்.

தேசிய ரீதியில் எப்படி பைதுல்மால் உருவாக்குவது, அத்திறைசேரியை எவ்வாறு பள்ளிவாசல்களின் அடிப்படையில் பன்முகப்படுத்துவது என்ற வினாக்கள் உடனடியாக உங்கள் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது.

இந்துக் கோயில்களும் கிறிஸ்தவ தேவாலயங்களும் பௌத்த விகாரைகளும் அரசாங்க தலையீடுகள் இல்லாமல் சுதந்திரமாக இயங்கும் போது ஏன் அல்லாஹ்வின் பள்ளிவாசல்கள் மாத்திரம் மறைமுகமாக அல்லாஹ்விலும் அவனது தூதரிலும் நம்பிக்கையில்லாத சக்திகளின் கரங்களில் அடிமைப்படுத்தப்பட வேண்டும் என்பதைப் பற்றியும் ஆழமாக நீங்கள் ஆலோசிக்க வேண்டும். பள்ளிவாசல்களினதும் உலமாக்களினதும் சுதந்திரத்தை விரைவில் மீட்பதில் எமது முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும்!

வட்டி, குடி, சூது, லஞ்சம், ஊழல், மோசடி போன்ற சமூகப் பிணிகளுக்கு அரசாங்கம் தீர்வுகளைக் காணுமென நாம் எதிர்பார்க்கவும் கூடாது. இந்த நோய்களுக்குரிய சிகிச்சைகளை இஸ்லாம் மாத்திரமே செய்ய முடியும். அதன் ஊடகமாக இருப்பவர்கள் உலமாக்கள்.

உலமாக்கள் மாத்திரமே தொடர்ந்தும் பொருளாதார ரீதியில் வஞ்சிக்கப்பட்டவர்களாகத் தான் இருக்க வேண்டுமா? யாராவது ஒருவரின் அல்லது பலரில் தங்கியிருக்கும் நிலைமை மாறி எவ்வாறு சொந்தக் கால்களில் நின்று சாதிக்கக் கூடிய பொருளாதார வளம் படைத்தவர்களாக ஏன் நீங்கள் மாறக்கூடாது?

*'ஜஸாகல்லாஹ் ஹைரன்'*

இவ்வண்ணம்
தங்கள் அன்புள்ள
எம். எச். எம். அஷ்ரஃப், M.P.

Printed By: Unie Arts (Pvt) Ltd.,